# சிவஞான சுவாமிகள் அருளிய
# காஞ்சிப் புராணம் - பகுதி **1**
# பாயிரம் **&** படலம் **1-6 (1-444)**

# kanchip purANam of civanjAna munivar - part 1
# part 1a / pAyiram & paTalam 1-6 /verses 1-444
# In tamil script, Unicode format


## Acknowledgements:

Our Sincere thanks go to Mr. Muthukkumaraswamy of SIngapore for the preparation of

the etext.
Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.
© Project Madurai, 1998-2007.
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation
of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website
**http://www.projectmadurai.org/**
You are welcome to freely distribute this file, provided this

header page is kept intact.

# திருவாவடுதுறை யாதீனம்
# சிவஞான சுவாமிகள் அருளிய
# காஞ்சிப் புராணம்
## பாகம் **1a / (1 - 444)**


| | |
|---|---|
| 0. பாயிரம் | 1 - 27 |
| 1. திருநாட்டுப்படலம் | 28 - 172 |
| 2. திருநகரப்படலம் | 173 - 298 |
| 3. பதிகம் | 298 - 329 |
| 4. வரலாற்றுப் படலம் | 330 - 357 |
| 5. சனற்குமாரப் படலம் | 358 -413 |
| 6. தலவிசேடப்படலம் | 414-444 |


உ

திருச்சிற்றம்பலம்

## **0.** பாயிரம்

காப்பு

1 கலிநிலைத் துறை
இருக வுள்துளை
வாக்குகார்க் கடங்கள்இங்
குலிகக்
குருநி றத்திழி
தோற்றம்முன்
குலாய்த்தவழ்ந் தேறிப்
பரிதி மார்பினில்
சமனொடு காளிந்தி
பயிலுந்
திருநி கர்த்தசீர் ஐங்கரக்
களிற்றினைச் சேர்வாம் 1

2 தல விநாயகர்

அறுசீரடி யாசிரிய
விருத்தம்
விகட சக்கர வாரணந்
தொடர்வரும் வித்தக
முகில்வீற
விகட சக்கர விந்தமன்
னவன்றனக் கருளுமெய்த்
தலைவாகு
விகட சக்கர வாகமென்
முலையுமை கான்முளை
என்னாச்சே
விகட சக்கர ரெந்திர
மெனச்சுழல் வெம்பவக்
கடல்நெஞ்சே 2

கடவுள் வாழ்த்து
சபாநாயகர்

3 வேறு

சங்கேந்து
மலர்க்குடங்கைப்
புத்தேளும்
　　மறைக்கோவும்
தழல்கால் சூலம்
அங்கேந்தும் அம்மானும்
தத்தமது
　　தொழில்தலைநின்
றாற்றச் செய்தோர்
பங்கேந்தும் பெருமாட்டி
விழிகளிப்ப
　　இருமுனிவர் பணிந்து
போற்றக்
கொங்கேந்து
மணிமன்றுள்
குனித்தருளும்
　　பெருவாழ்வைக்

குறித்து வாழ்வாம். 1

4 திருவேகம்பநாதர் .

தணந்தபெருந்
துயர்க்கடல்மீக்
கூர்தலினான்
மலைபயந்த
தரளமூரற்
கணங்குழையாள்
புரிபூசை முடிவளவுந்
தரியாமல் இடையே
கம்பை
அணங்கினைத்தூ
தெனவிடுத்து
வலிந்திறுகத்
தழீஇக்கொள்ள
அமையாக் காதல்

மணந்தருளிக் குறிபூண்ட
ஒருமாவிற்
    பெருமானை 2
வணக்கஞ் செய்வாம்.
காமாட்சியம்மையார் .

ஊன்பிலிற்று மழுவாளி
கலவிதனில்
    ஒண்ணாதென்
றோர்ந்து நஞ்சந்
தான்பிலிற்றும்
பாப்பணியை
நீப்பவுங்கார்
    வண்டினங்கள்
ததைந்து மூசத்
தேன்பிலிற்று
நறுங்கடுக்கைத்

தெரியலைப்பாம்
பெனமருண்டத்
தெரியல் நாறுங்
கான்பிலிற்றத்
தெருண்டணையும்
காமக்கோட்
டத்துமையைக்
கருத்துள் வைப்பாம் 3

6 கருக்காமக் கோட்டிமிர
வினையனைத்தும்
ஒருங்கெய்திக்
கலகஞ் செய்யுந்
தருக்காமக்
கோட்டியெலாம்
அறஎறிந்தாம்
இனியென்றும்
தகைசால் அன்பு

சுருக்காமக்
கோட்டினைச்சே
யரைகரங்
கொண்டார்க்கு
முலைச்சுவடு நல்குந்
திருக்காமக்
கோட்டியம்மை
சேவடிப்போ
தெப்போதுஞ் சிந்திப்
பாமால். 4

7 விகடசக்கர விநாயகக்
கடவுள்

விழிமலர்ப்பூ
சனையுஞற்றித்
திருநெடுமால்
பெறுமாழி மீள

வாங்கி
வழியொழுகாச்
சலந்தரன்மெய்க்
குருதிபடி
முடைநாற்றம் மாறு
மாற்றால்
பொழிமதநீர்
விரையேற்றி விகடநடப்
பூசைகொண்டு புதிதா
நல்கிப்
பழிதபுதன் தாதையினும்
புகழ்படைத்த
மதமாவைப் பணிதல்
செய்வாம்.

8 குமாரக் கடவுள்.

முருகோட்டந் தரப்பாயும்
மும்மதமும்

ஊற்றெடுப்ப
முரிவிற்கோட்டும்
ஒருகோட்டு மழகளிற்றை
இருகோட்டு
முதுகளிறா உலவக்
காட்டிப்
பருகோட்ட
நறைவேட்டுப்
பைங்கோட்டுத்
தினைப்புனத்துப்
பரண்மேற்கொண்டு
குருகோட்டும்
பெடைமனந்த குமரகோட்
டத்தடிகள் குலத்தாள் 6
போற்றி.
9 வயிரவக் கடவுள்
வேறு

எளியவரை வலியர்
வாட்டின்
வலியரை இருநீர்
வைப்பின்
அளியறத் தெய்வம்
வாட்டும்ஔ
எனுமுரைக் கமைய
வன்றே
தெளியுமா வலியைச்
செற்றோற்
செகுத்துரிக் கவயம்
போர்த்த
வளியுளர் கச்சி காவல்
வயிரவர்க் 7
கன்பு செய்வாம்
10 திருநந்திதேவர்
அங்கணன் கயிலை

காக்கும் அகம்படித்
தொழின்மை பூண்டு
நங்குரு மரபுக் கெல்லாம்
முதற்குரு நாத னாகிப்
பங்கயந் துளவம் நாறும்
வேத்திரப் படைபொ
றுத்த
செங்கையெம் பெருமான்
நந்தி சீரடிக் கமலம் 8
போற்றி
11 அகத்திய முனிவர்
காசியி னின்றும் போந்து
கம்பர்தாம் அருளப்
பெற்று
மாசிலாக் கச்சி மூதூர்
மன்னிவீற் றிருந்து
பூமேல்

அசிலாத் தமிழ்ப ரப்பி
அருந்தமிழ்க் குரவு
பூண்ட
தேசினான் மலய
வெற்பிற் குறுமுனி
திருத்தாள் போற்றி

அகத்தியர் தென்னாடு
போந்த வரலாறு ,
இப்புராணத்தில் தழுவக்
குழைந்த படலத்தில் 185
முதல் 247 வரையிலுள்ள
செய்யுட்களால்
கூறப்படுகின்றது 9

12 திருஞானசம்பந்த மூர்த்தி
நாயனார்
வேறு

பரசமய கோளரியைப்
பாலறா
      வாயனைப்பூம்
பழனஞ் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான
சம்பந்தப்
      பெருமானைத் தேய
மெல்லாம்
குரவையிடத்
தமிழ்வேதம்
விரித்தருளுங்
      கவுணியர்தங் குலதீ
பத்தை
இரவியெமை
யாளுடைய வென்றிமழ
      விளங்களிற்றை
விரும்பி வாழ்வாம்.

13 திருநாவுக்கரசு நாயனார்

இடையறாப் பேரன்பும்
மழைவாரும்
இணைவிழியும்
உழவா ரத்திண்
படையறாத் திருக்கரமும்
சிவ்பெருமான்
திருவடிக்கே பதித்த
நெஞ்சும்
நடையறாப்
பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன்
ஞானப் பாடல்
தொடையறாச்
செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும்
துதித்து வாழ்வாம்

14 சுந்தரமூர்த்தி நாயனார்

ஒருமணத்தைச்
சிதைவுச்செய்து
வல்வழக்கிட்
டாட்கொண்ட உவனைக்
கொண்டே
இருமணத்தைக்
கொண்டருளிப்
பணிகொண்ட
வல்லாளன் எல்லாம்
உய்யப்
பெருமணச்சீர்த்
திருத்தொண்டத்
தொகை விரித்த
பேரருளின் பெருமாள்
என்றுந்
திருமணக்கோ

லப்பெருமாள்
மறைப்பெருமாள்
எமதுகுல
தெய்வமாமால் 12
15 மாணிக்கவாசக
சுவாமிகள்
பெருந்துறையிற்
சிவபெருமான்
அருளுதலும்
பெருங்கருணைப்
பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந்
திருகண்ணீர் மழைவாரத்
ற்றியநிலை கடந்து
போந்து
திருந்துபெருஞ்
சிவபோகக்

கொழுந்தேறல்
வாய்மடுத்துத்
தேக்கிச் செம்மாந்
திருந்தருளும்
பெருங்கீர்த்தி வாதவூர
டிகளடி யிணைகள்
போற்றி 13

16 அறுபத்துமூவர்
கலி விருத்தம்
தத்து மூவெயில் மூன்றுந்
தழலெழ
முத்து மூரல் முகிழ்த்த
நிராமய
சித்து மூர்த்திதன்
தாளிணை சேரறு
பத்து மூவர் பதமலர்

போற்றுவாம் 14
17 சேக்கிழார் நாயனார்
தூக்கு சீர்த்திருத்
தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல
வல்ல பிரான் எங்கள்
பாக்கி யப்பய னாப்பதி
குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி
யிருத்துவாம் 15

18 திருக்கூட்டத்தார்
அறுசீரடி யாசிரிய
விருத்தம்
பேயன்ன புறச்சமயப்
பிணக்குநூல்
வழியனைத்தும்
பிழையே யன்றி

வாயன்மை
தெளிந்துசைவ சித்தாந்த
வழிதேறி அதீத
வாழ்வில்
போயண்மி
அஞ்செழுத்தும் திருநீறும்
கண்டிகையும்
பொருளாக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம்
பணிந்திறைஞ்சும்
பெரும்பேறு
நான்பெற் றேனால் 16

19 பஞ்சாக்கர தேசிகர்
கயிலாய பரம்பரையிற்
சிவஞான
போதநெறி காட்டும்
வெண்ணெய்

பயில்வாய்மை
மெய்கண்டான்
சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு
வாகிக்
குயிலாரும்
பொழில்திருவா
வடுதுறைவாழ்
குருநமச்சி வாய
தேவன்
சயிலாதி மரபுடையோன்
திருமரபு
நீடூழி தழைக மாதோ 17
20 பின்வேலப்பதேசிகர்
எவ்வெவர்கோட்
படுபொருளும்
அன்செழுத்தின்

அடக்கியவற் றியல்பு
காட்டி
மெய்வகையஞ்
சவத்தையினும்
நிற்குமுறை
ஓதுமுறை விளங்கத்
தேற்றி
அவ்வெழுத்தின்
உள்ளீடும்
அறிவித்துச்சிவபோகத்
தழுத்தி நாயேன்
செய்வினையும்
கைக்கொண்ட வேலப்ப
தெசிகந்தாள் சென்னி
சேர்ப்பாம் 18
21 மற்றைய சிவநேசர்கள்
மறைநான்கும்

பயின்றொழுகி
இட்டிகளும்
　　　பலவியற்றி மல்லல்
ஞாலத்
திறவாத புகழ்படைத்தும்
ஈசனிடத்
　　　தன்பிலரை
எண்ணாதுளம்
புறமோதிக்
கொலைபயின்று
மதுமாந்துங்
　　　கொடும்பாவப்
புலையரேனும்
அறவாணன் திருவடிக்கீழ்
அன்பினரேல்
　　　அவரெம்மை
அடிமை கொள்வார்

22 நூல் செய்தற்குக் காரணம்
கலிநிலைத்துறை
பொருவில் கச்சியம்
புரானம் வண் டமிழினிற்
புகலென்
றிருநி லம்புகழ் மணிமதிற்
கச்சியே கம்பர்
திருவ ருட்குரி யான்றவர்
கூறிய சிறப்பால்
உரிமை மற்றெழு
மாசையான் உரைத்திட 1
லுற்றேன்

23 அவையடக்கம்
மாயை காரிய உருக்களும்
எம்பிரான் வடிவ

மாய வேலவை அருள்மய
மாகுமற் றதுபோல்
பேயனேன்பிதற் றுரையுமே
கம்பர்தம் பெருமை
தூய காதையுள் ளுறுதலால்
துகளறத் தோன்றும் 1

24 இழித்த சொற்புணர்த்
தெளியனேன் இயம்பிய
கவியுங்
கழித்த ஐவகை இலக்கண
வழுவுக்குக் காட்டாப்
பழித்தி டாதெடுத்தாளுவர்
பல்வகைச் சுவையுங்
கொழித்த நாவின ராகிய
வழுத்தபு குணத்தோர் 2

25 எழுத்துப் போலியும்
எழுத்தென வாளுவர்

அதுபோல்
புழுத்த நாயினேன்
பிதற்றிய செய்யுட்போ
லியையும்
பழுத்த கேள்வியோர்
கைக்கொள்வர் என்பது
பற்றி
விழுத்த நாணினேன்
சிவகதை விளம்புதற்
கிசைந்தேன் 3
26 நெறிவ ழாஉமை பூசனை
போல்நெறி பிறழ்ந்தோன்
எறித ருங்கலுங்
கைக்கொளுங் கச்சியெம்
பெருமாற்
கறிவின் மேலவர்
காப்பியப் பனுவல்போல்

அறிவின்
குறியி லேன்கவிப்
புன்சொலுங் கொள்வது 4
வழக்கால்.
27 சிறப்புப் பாயிரம்
எழுசீரடியாசிரியவிருத்தம்
அருட்பணிக் குரிய
மகேச்சுரர் முதலா
நால்வருந் தருகவென்
றறைய
மருட்பகை துமிக்குங்
காஞ்சிமான் மியத்தை
வழங்குதென்
மொழியினா லுரைத்தான்
கருப்பகை யிரிக்கும்
ஞானமும் ஏனைக்
கலைகளும் கரிசறப்

பெய்யின்ற
மருப்பொழி லுடுத்த
வாவடு துறையில்
வாழ்சிவ ஞானமா
தவனே

-------------

---

## 1. திருநாட்டுப்படலம் (28-172)

28 கலிநிலைத்துறை
பணங்கொள் பாம்பணி
கம்பனார் பனிவரை
பயந்த
அணங்கி
னோடென்றும்
அமர்ந்தினி தரசுவீற்
றிருக்கும்

உணங்க ரும்புகழ்க்
காஞ்சியை அகந்தழீஇ
உம்பர்
வணங்க மேவரும்
பாலிநாட் டணிநலம்
வகுப்பாம் 1

29 மழைச்சிறப்பு

கடல்க டைந்திடச்
செல்லுறூஉம்
வெள்ளைமால்
கடுப்பப்
படலை வெண்முகில்
பரவைநீ
ருழக்கிவாய்
மடுத்து
விடமெ ழுந்தென
மீண்டவம்

மாயனை விழைய
உடல்க றுத்துவிண்
நெறிப்படர்ந்
தொய்யென
மீண்டு 2
அற்றை ஞான்றுமால்
கயிலையைச்
சரணடைந் தாங்குப்
பொற்ற நந்தியஞ்
சாரல்சூழ்
பொருப்பினைக்
குறுகிக்
கற்றை வார்சடைச்
சுந்தரன் கடவவான்
மதுரை
முற்று நான்முகி
லெனவரை முழுவதும்

பொதிந்து 3
31 முரிந்த வெண்டிரைக்
கருங்கடல்
முகட்டினைக் குழித்து
விரிந்த வெள்ளநீர்
மடுப்புழிக் கரந்துடன்
மேவிக்
கரிந்தி டத்தனைச்
செய்ததீ வடவையின்
களவைத்
தெரிந்து வில்லுமிழ்
தடித்தெனத்
திசைதொறும் சிதறி 4
32 கான்ற அக்கனல்
மீட்டடை யாவகை
கருதி
வான்ற னிற்குனி

சிலையெனத்
தடையினை வயக்கி
ஏன்ற நீயினி
எதிர்த்தனை யாயிடின்
இன்னே
ஊன்ற னோடுயிர்
குடிப்பலென்
றுருமொலி எழுப்பி
33 அடுத்த டுத்தலை
மோதுதெண்
டிரைப்புனல் அளக்கர்
உடுத்த பாரிலுன்
கிளையெலாம் முதலற
ஒருங்கே
படுத்து நின்வலி
பாற்றுவன் யானெனப்
பகைமை

தொடுத்த வன்சினங்
கொண்டழல் மேலமர் 6
தொடங்கி.

34 விச்சை மந்திர
வலியினால் வீங்குநீர்
மழையை
வச்சி ரக்கணை
யாக்கிமெய்
வளமெனக் கருளும்
பொச்ச மில்மறை
வேள்வியும்
புனிதனேந் தழலும்
எச்ச மாகமற்
றெவையுமீண்
டிறுகென இயம்பி 7

35 காட்ட கங்களுங்
கழைநரல் கதிர்மணிச்

சிமயக்
கோட்ட கங்களுங்
குளிர்புனற் கழனிசூழ்
குலவு
நாட்ட கங்களும்
பரல்முரம் படுத்தெரி
நடஞ்செய்
மோட்ட கங்களும்
முழுவதுங் 8
குளிர்கொளச் சொரிந்து
36 இற்றொ ழிந்தன
ஒழியமற் றெஞ்சிய
எரிபோய்க்
கற்ற வேதியர்
வேள்வியஞ்
சாலையுட் கரப்ப
உற்ற வாகண்டு

தன்சினக் கனலையும்
ஒருவி
வெற்றி மாமுர
செனமறைப் பேரொலி 9
விளக்கி
37 தனது கீர்த்தியுந்
திறற்பிர தாபமுந்
தரைமேல்
அனல்செய் கோபமும்
முல்லையு
மெனஎங்கும்
அமைத்துப்
புனித மாம்அவை
தன்னையும்
பொதிந்துகொண்
டென்னப்
பனிவி சும்பினிற்

சிவந்துவெண் 10
ணிறம்படைத் தன்றே
38 அறுசீரடியாசிரிய
விருத்தம்
உடுவணி குடுமிக்
கோடு பிளவுபட்
டுடையப் பெய்யும்
கொடுமழைக் காற்றா
தங்கட் குளிர்பெயல்
மாற எண்ணி
நெடுமலை எடுத்துக்
காட்டு நெட்டிதழ்க்
காந்தட் கொள்ளி
விடுசுடர்க் கனலி
அந்தப் புனலொடும்
வீந்த தன்றே. 11

39 போதம்மே லாகப்
பண்டே புல்லிய
மலநோய் தீர்ந்தும்
வாதனை தாக்கு
மாபோல்
மழைப்பெயல் மாறித்
தீர்ந்துங்
காதல்செய் துறையும்
புள்ளும் மாக்களுங்
கவன்று நெஞ்சம்
நோதக மரங்க
ளெல்லாம் நுண்துளி 12
துவற்றும் மாதோ.
40 கனைபெயல் எழிலிக்
கூட்டங் கலிவிசும்
பகடு போழ்ந்த
நனைமுடி நந்திக்

குன்றம் நளிபடப்
பொழியுந் தெண்ணீர்
புனைமறை வசிட்ட
மேலோன்
செருத்தலான்
பொழிந்த தீம்பால்
வனைபுகழ் வெள்ள
மென்னத்
திசைதொறும் வழிந்த 13
தன்றே.

41 பாலியாற்று வளம்
கண்ணகன் குடுமிக்
குன்றிற் கல்லெனக்
கறங்கி ஆர்த்து
விண்ணிவர் ஏணி
யென்ன வியன்முடி
தொடுத்து வீழுந்

தண்ணறா அருவி
யெல்லாந் தலைத்தலை
விரிந்து சென்று
புண்ணியப் பாலி
யாற்றிற் சேர்ந்துடன் 14
போய மாதோ.
42 பாரிடங் குழித்து
வீழும் பல்வயின்
அருவி யெல்லாம்
ஓரிரும் பாலி யாற்றின்
ஒருங்குசென்
றணையுந் தோற்றம்
சீரிய புவனந் தோறுஞ்
சிதறிய வினைக
ளெல்லாம்
ஓரிடத் தொருவன்
றன்பால் உடங்குசென்

றுறுதல் போலும். 15
43 விலகிவீழ் அருவித்
தாரை வேறுவே
றாகஓடிக்
குலநதிப் பாலி
வைப்பின் ஏகமாய்க்
கூடுந் தோற்றம்
அலகில்பல் வழியும்
மூதூர் அணிமையின்
ஒன்றா மாறும்
பலபல மதமும் ஈற்றின்
ஒருவழிப் படலும்
போலும் 16
44 மலைநகைத் தனைய
காட்சி வயின்வயின்
அருவித் தாரை
சிலையினின் றிழிந்து

மண்மேல்
திரண்டுசென்
றணையுந் தோற்றம்
உலவையோ டிகலிச்
சேடன் உயர்வரைக்
குடுமி யெல்லாம்
பலதலை விரித்துப்
பொத்திக் கிடந்தவப் 17
பான்மை போலும்.
குரைபுனல் தொண்டை
நாட்டைக் குறும்பெறிந்
தடிப்ப டுத்துப்
புரைதப நடாத்து
கென்னாப் புதுமுகி
லரசன் நந்தி
வரைமிசை யிருந்து
வேந்தா மணிமுடி

சூட்டி உய்ப்பத்
திரைபடு பாலி வல்லே
சிலையினின் றிழிந்து 18
போந்து
46 அரசுகள் சூழ்ந்து
செல்ல அருங்கணி
மலர்வாய் விள்ளச்
சரிகுழற் குறமின்
னார்கள் பற்பல தானை
வெள்ளம்
விரவிடப் பரிய
காலாண் மேதகு
மாக்கள் அத்தி
இருபுடை தழுவிப்
போத இகல்கொடு 19
வையம் ஊர்ந்து
47 அணிவகுத் தெழுந்து

குன்றர் அரும்பெறற்
குறிச்சி புக்கு
மணிவகை ஆரம்
பூண்டு மதுக்குட
விருந்து மாந்தித்
தணிவற
வெளிக்கொனண்
டேகித் தலைதலை
வேட்டம் போகித்
துணிபட மாக்க
ளெல்லாந்
தொலைதுடன் ஈர்த்துச்
சென்று
48 கலிவிருத்தம்
மண்டமர் மேல்கொடு
வந்தனம் இன்னே
தண்டக நாட்டுறை

தாபதர் நோயோர்
பெண்டிரும் நும்மரண்
ஏகுதிர் பெட்டென்
றெண்டிசை யார்ப்ப 21
இசைப்பறை சாற்றி
49 இறாற்றிகி ரிப்படை
தாங்கி இபக்கோ
டறாத்திறல்
வெஞ்சிலை காந்தள்
அரும்பு
நறாப்பயில் கோலென
ஏந்திநல் வீர
மறாப்பகை
மாய்த்துறை வெட்சி
மலைந்து 22
50 முல்லையின் வேந்து
முடித்த கரந்தை

ஒல்லை அலைதுயர்
ஆநிரை பற்றி
மெல்லிதழ் தின்று
சிவந்தெழு
வேய்த்தோள்
நல்லவர் கற்பை 23
யழித்து நடந்து
51 வஞ்சி மலைந்தழல்
பாலையை வாட்டி
அஞ்சி யிடாதுதன்
ஆணை யிருத்தி
எஞ்ச லுறாமரு
தத்திறை யோடும்
வெஞ்சம ரேற்றுழி
ஞைத்துணர் வேய்ந்து 24
52 தடுத்தெதிர் நின்ற
தடங்கரை யெல்லாம்

படுத்து மதன்பயில்
பாசறை வீட்டி
மடுக்குளம் ஏரியின்
வாட்ட மனைத்தும்
கெடுத்தனம் என்று 25
தழீஇக்கிளர் வுற்று
53 வீறி யடாவகை
வெஞ்சிறை கோலித்
தூறிடு மள்ளர்
தொலைந்தழி வெய்தச்
சீறி யடர்ந்து
தெழித்துமுள் வேலி
கீறி வளைந்து
கிடங்கினை நீங்கி 26
54 நொச்சியை முற்றியந்
நொச்சியி னுள்ளார்
பச்சிள நொச்சி

பறித்தணி யாமே
நச்சிய தும்பை
நறுந்துணர் சூடி
அச்செழு மாமதில்
முற்றும் அகழ்ந்து
அழித்து
விட்டமையால்
நொச்சியணியாமே
என்றார். 27

55 வேறு

இடித்துவெளி செய்துந
ரெங்கணும்
நுழைந்தாங்
கடுத்தமட வார்வயி
றலைத்தனர் இரங்கக்
கொடுத்திடு
வளங்கள்பல

கொள்ளைகொடு
மண்ணின்
எடுத்துவரு வெள்வரகு
கொள்ளுடன் இறைத்து 28
56 வெற்றிபுனை மாலிகை
மிலைச்சியிரு பாலுஞ்
சுற்றிவரு புட்குல
நிரைத்தொழுதி
தன்னால்
கொற்றமிகும்
ஆர்கலியை
நோக்கியறை கூவி
எற்றுசுழி நெய்தல்வழி
எய்துறுத லோடும் 29
57 பௌளவம
துணர்ந்துபவ ளந்தரள
மாதி

வெள்ளவுதிரை
ஏந்தியெதிர் கொண்டடி
வணங்கச்
செவ்விதின்
உவந்துபயம் ஈந்துசின
மாறிக்
கெள்வியமெய்
யன்பொடு
கலந்துளதை யன்றே 30
58 அறுசீரடியாசிரிய
விருத்தம்
தன்னடிப் படுத்து
மேலைத் தண்டக நாடு
முற்றும்
முன்னுறக் கவர்ந்து
கொண்ட வளத்தினும்
மூவி ரட்டி

பின்னுற அளித்து
வானிற் புலவரும்
பெட்கு மாற்றால்
அந்நிலை உயிர்கள்
ஓம்பி அரசுசெய்
துறையும் பாலி. 31
59 “காரணப் பொருளின்
தன்மை காரியத்
துளதாம்” என்ன
ஆரணப் பனுவல்
கூறும் அரும்பொருள்
தெளியத் தேற்றும்
பேரிசைப் புவிமேல்
யார்க்கும் பெட்டன
பெட்ட வாறே
சீரிதிற் கொடுக்குந்
தேனுந் தரவருஞ்

செழுநீர்ப் பாலி. 32

60 வறுமையுற் றுழியும்
தொண்டை வளமலி
நாட்டோர் தங்கள்
இறுமுடல் வருத்தி
யேனும் ஈவதற்
கொல்கார் அற்றே
தெறுகதிர் கனற்றும்
வேனிற் பருவத்தும்
சீர்மை குன்றா
துறுமணல் அகடு
கீண்டும் ஒண்புனல்
உதவும் பாலி 33

61 சொற்றவித் தீர்த்த
மேன்மை சுவைபடும்
பாலோ டொக்கும்
மற்றைய தீர்த்த

மெல்லாம் வார்தரு
புனலோ டொக்கும்
பெற்றிமை உணர்ந்து
தொல்லோர் பெயரிடப்
பட்ட சீர்த்தி
பற்றிய தெனலாம்
பாலிப் பெருமையார்
பகரு நீரார். 34
62 நாட்டு வளம்
கலிநிலைத்துறை
விளம்பும் இத்தகை
மணிகொழி விரிதிரைத்
தரங்க
வளம்பு னற்றடம்
பாலியான்
வண்மைபெற் றோங்கி
உளம்ப யின்றுநாற்

பொருள்களும்
உஞற்றுநர்க் கிடமாய்த்
துளும்பு மேன்மையிற்
பொலிந்தது 35
தொண்டைநன் னாடு
63 செக்கர் வார்சடைச்
சிவபிரான் திருவருள்
செய்யத்
தக்க வாய்மையின்
உயிர்க்கெலாந்
தன்னிடத் திருந்து
மைக்கண் எம்பெரு
மாட்டியெண்
ணான்கறம் வளர்க்குந்
தொக்க மாப்புகழ்
படைத்தது
தொண்டைநன் னாடு

36

64 பவம்வி ளைத்திடாப்
பெரும்பதி
யெனத்திசை போய
சிவம்வி ளைத்திடு
நகரங்கள் ஏழுளுஞ்
சிறந்தது
தவம்வி ளைத்திடு
காஞ்சியைத் தன்னிடத்
திருத்தி
நவம்வி ளைத்திடும்
பெருமைபூண்
டதுதொண்டை நாடு 37

65 நானிலத்து ஐந்திணை
வளம்
தரைவி ளங்கிய
தண்டக நாட்டினில்

தகைசால்
வரையுங் கானமும்
புறம்பணைப்
பழனமும் மணிநீர்த்
திரையும் வேலையு
மென்னுநா
னிலத்தினுள் சிறந்த
புரையில் ஐந்திணை
வளஞ்சிறி தறிந்தவா
புகல்வாம் 38
66 முருக வேட்கிடு
தூமமோம் புறமுளி
அகில்சந்
துருவ வாரழற்
பெய்துபுன்
பயிர்விளைத்
துவப்பார்

பெருவ ளந்துறந்
தூர்தொறும் இடுபலி
பேணும்
பொருவில்
வாழக்கையர்
தஞ்செயல்
போன்மெனப் 39
பொருப்பர்.

67 ஏறு தன்னுடல்
வருத்திய
பகைமையெண் ணாது
தூறு பன்மணி
மாமுதல்
பொறையெலாந்
தொலைத்த
வேறு நன்றியே
கடைப்பிடித்

திதைவியன்
பொருப்பர்
கூறு நல்வளம்
விளைத்திடும்
உயர்ந்தவர்
செயல்போல்
68 வேட்டை மேற்புகு
வார்க்குநல்
வினையுந்த மடவார்
கூட்டம் வாய்க்குமச்
சாரலில் தினைக்குரற்
கெய்துஞ்
சேட்டி ளங்கிளிக்
குலங்களத்
தெரிவைமார் ஓம்பும்
பாட்டி சைத்திறம்
ஒளியிருந் தனுதினம்

பயிலும் 41
69 நங்கு லத்துரு
வாழ்க்கையைக்
கெடுத்துநம் இருக்கை
தங்க ளுக்கெனக்
கொண்டஇவ்
வேனல்கள் தம்மை
இங்கண் வாட்டுதும்
என்பதோர் சூழ்ச்சிஎண்
ணியபோல்
அங்கண் எஞ்சிய
வேங்கைகள்
போதுசெய் தலரும் 42
70 என்னை ஊர்ந்தருள்
சுடர்வடி யிலையவேற்
பெருமான்
தன்னை நன்மரு

கெனப்படைத்
தவன்றன தூர்த்தி
அன்ன தாமெனுங்
கேண்மையா
ளிமுகிற் குலத்தைக்
கன்னி மாமயில்
காண்டொறுங் களிசிறந்
தகவும் 43
71 நெருங்கு பைந்தழை
வருக்கைமேல்
நெடுவெளி யலைப்ப
அருங்கண் மாமயில்
வீற்றிருந் தசைதருங்
காட்சி
கருங்க ணாயிரச்
செம்மல்தன்
மருகனைக் காண

மருங்கு வந்துதன்
ஊர்தியை நிறுவுதல்
மானும். 44

72 சந்தும் ஆரமும்
தாங்கிவம் பலர்ந்ததண்
குவட்டான்
மைந்தர் கண்ணையும்
மனத்தையுங்
கவர்ந்திடும் வனப்பின்
முந்தும் ஓங்கலும்
கொடிச்சியர்
குழுக்களும்
முகில்தோய்
கந்த மார்குழை
முகத்தலர் இலவங்கங்
காட்டும்.
45

73 கொங்கை யேந்திய
ஆண்களும்
அவணகொம் புடைய
துங்க வேங்கையின்
குலமெலாம்
அவனபால் சுரந்து
பொங்கு நீடுசே
வினங்களும்
அவணவான் புனலை
அங்கண் வேட்டுணும்
ஒற்றைத்தாள் 46
எகினமும் அவண
74 ஆணெ லாமொரு
கன்னியை மணப்பவா
னணையும்
கோணை வேங்கைகள்
யாட்டினோ

டுறவுகொண்
டோங்கும்
பேணு சேவினஞ்
சிங்கமேல் ஏறிடும்
பிழையா
தேணி னாற்பொலி
எகினங்கள் இடபத்தை
விழுங்கும் 47
75 வில்ல லர்ந்த
உடுக்களும்
விண்நெறிப் படருஞ்
செல்லும் வெண்கதிர்க்
கடவுளும் பானுவுந்
திறல்சால்
மல்லல் வானவக்
குழுவுமெய்ப் பாறவந்
திருக்கும்

இல்லம் எங்கணும்
வான்தொட
இழைத்திடுங் குன்றம் 48
76 போது மூன்றினும்
போதுசெய் காவிசூழ்
பொருப்பும்
மேத குந்தமிழ்க்
கெல்லையாம்
வேங்கட வரையுங்
காதல் பூப்பவத்
தாணிகொண் டறுமுகக்
கடவுள்
கோது நீத்தர
சாட்சிசெய்
குறிஞ்சிஅக் குறிஞ்சி 49
77 அன்பெ லாமொரு
பிழம்பெனத்

திரண்டகண் ணப்பன்
எம்பி ராற்கொரு
விழியிடந் தப்புகா
ளத்திப்
பொன்பி றங்கிய
முகலிசூழ் கயிலையம்
பொருப்பும்
தன்பு லத்திடை
யுடையது தடவரைக்
குறிஞ்சி
78 நாவல் மன்னவர்க்
கிரந்துசோ றளித்திடு
நம்மான்
தேவி யோடமர்
திருக்கச்சூர்
திருவிடைச் சுரமும்
பாவ காரியர்

எய்தொணாக்
கழுகுசூழ் பறம்பும்
மேவ ரத்திகழ்
குறிஞ்சியின்
பெருமையார் 51
விரிப்பார்

79 **2.** பாலை

குராவ ளித்திடு
பாவையைக்
கோங்குபொன்
கொடுத்துப்
பராரைப் பாடலம்
பூந்தழற் பாங்கரின்
மணப்ப
மராம ரத்துளர்
வண்டுபண் பாடவன்
முருங்கை

விராவி வெண்பொரி
இறைத்திடும் 52
வியப்பின தொருபால்
எயிற்றி மார்எழில்
நலத்தினுக் கிரியல்போ
யுடைந்தாங்
கயற்பொ தும்பர்புக்
கலர்குராப் பாவைகண்
டவர்தந்
துயிற்ர்று சேயெனக்
கவன்றுபோய்த்
தூதுணம் புறாக்கள்
வெயிற்ற
லைக்கண்ணின்
றுயங்குவ
நிலைமைவிண்
டவர்போல் 53

81 தூது ணம்புற
வினமெலாம்
துணையுடன் கெழுமிப்
போத ஊடியும்
உணர்த்தியுந்
தலைத்தலைப்
புணர்ந்து
காதல் அந்நலார்
மொழியையுங்
கடந்துசே
ணிடைச்செல்
ஏதில் ஆடவர்
தமைச்செல
வழங்குவித் திடுமால் 54
82 வெங்க திர்ப்பிரான்
நண்பகற் போதினில்
வேனில்

மங்கை
கொங்கைதோய்ந்
தளித்திடும்
பாலையாம் மைந்தன்
அங்கண் நானில
அரசர்பால் இரந்துவன்
முரம்பு
தங்கு சூழலில் சிற்றர
சாள்வதும் உளதால்
83 **3.** முல்லை
நவிலும் இந்நிலப்
புறம்பயில் புறவநன்
மடந்தை
குவிவ ருந்தழல்
வெம்மைகூர்
கொடும்பசி தணியச்
செவிலி யாய்முகில்

தீம்பயம் ஊட்டிட
வளர்ந்தாங்
கவிழு நீள்வர
காதியாம் மகப்பயந்
தளிக்கும் 56
84 கொல்லை யெங்கணும்
கொழுமலர் ததைபுன
முருக்கின்
முல்லை மென்கொடி
படர்ந்தலர் நிரைநிரை
முகிழ்ப்ப
அல்லை வென்றகந்
தரப்பிரான் அரக்கெறி
மார்பில்
தொல்லை
வெண்டலை மாலிகை
துயல்வரல் மானும் 57

85 நீலம் பூத்தலர்
பூவையைக்
கோட்டுநீள் கரத்தால்
கோலம் பூத்தபொற்
கொன்றைகள்
தழீஇக்கிடந் தசைவ
ஆலம் பூத்தருள்
மிடற்றினோன்
அன்றுமோ கினியாஞ்
சீலம் பூத்தமால்
இளமுலை திளைப்பது
தெளிக்கும் 58
86 பெண்ண லங்கனி
இடைக்குலப் பிடிநடை
மடவார்
விண்ண லங்கனி
மாதரை எழிலினால்

வென்று
பண்ண லங்கனி
மிடற்றவர்
பணைத்தழுக் கரிந்து
மண்ணில் எங்கணும்
தூக்கிவைத் 59
தெனக்குமிழ் மலரும்
87 மெளளவ லங்குழ
லார்விழிக்
குடைந்துவான்
குதிக்கும்
நவ்வி மீண்டக
லாவகை மகளிரா
னனத்துக்
கொவ்வு றாதவர்
ஆணியில் திரியும்ஒண்
மதிகண்

டவ்வு ழித்தன
திருக்கையிற்
சிறைப்படுத்
தலைக்கும் 60

88 கற்றை வார்குழல்
ஆய்ச்சியர் கயல்விழி
முகத்தின்
பெற்றி யொப்புறப்
பெருங்குருந்
துச்சிமேல் தாவி
ஒற்றை மானுடைக்
கலைமதி அதன்நிழல்
உறங்கும்
மற்றை மானையும்
பற்றுவான்
கதிர்க்கையால் வருடும் 61

89 நலம்ப யின்றிள

வேனிலின் நவிலுமாங்
குயில்கள்
அலம்பு கார்வரும்
போதுவா யடைப்பது
முன்னாள்
புலம்பு கொண்டவர்
காரொடுந்
தலைவர்தேர் புகுத
வலம்பு னைந்துரை
வளமொழிக்
கிடைதலா னன்றே 62

90 தொண்டை மான்கடக்
களிற்றினை
முல்லையால்
தொடக்கி
அண்டர் தம்பிரான்
வெளிப்படக் காட்சிதந்

தருள்சீர்
கொண்ட வான்பதி
முதல்பல தன்னிடைக்
குலவக்
கண்ட முல்லையின்
பெருமையார் 63
கட்டுரைத் திடுவார்

91 **4.** மருதம்

பொலஞ்சி றைச்சுரும்
புளர்தரு புறவ
நிலந்த னைப்புடை
யுடுத்தது நெட்டிள
வாளை
இலஞ்சி நின்றுமீப்
பாய்ந்தவெண்
மதிகிழித் தேகித்
தலங்கொள் வானியாற்

றுலவுபூந் தடம்பணை 64
மருதம்
92 ஆற்றுக்கால் சிறப்பு
ஒருவ னாகிய சிவபிரா
னுலகுயி ரளிப்பக்
கருணை கூர்ந்துமுன்
நவந்தரு பேதமுங்
காட்டுந்
திருநி கர்ப்பவோர்
பாலியே வயல்வளஞ்
செழிப்பப்
பெருகு தண்புனல்
பற்பல கால்களாய்ப்
பிரியும் 65
93 பராரை மூலமேற்
பணைகிளை
வளாரெனப் பலவும்

விராவி ஒன்றினொன்
றனந்தமாய்க்
கவடுவிட் டென்னத்
தராத லம்புகும்
பாலியிற் பிரிந்துதண்
கரைக்கண்
அராவு கால்களும்
அவைதரு கால்களும் 66
அனந்தம்
94 நான்மு கப்பிரான்
வேள்வியைத் தபவரு
நதியை
மால்ம றுத்திடைக்
குலையெனக்
கிடந்தமை மான
மீன்மு கப்பெருங்
காற்புனல் தட்பவீழ்ந்

துழல்லும்
பான்மு லைகரு
மேதியாற் பருமடை 67
யுடையும்
குலை - செய்கரை
பழங்கண் வேனிலைப்
புயல்கொடு பாற்றுதன்
இறைக்குத்
தழங்கும் ஓதையின்
மருதம்வாழ்த்
தெடுப்பது தகைய
வழங்கு தண்ணுமை
ஓதையும் மள்ளர்ஆர்ப்
பொலியும்
முழங்கு தீம்புனற்
சும்மையும்
முடுகிவிண் புகுமால் 68

96 பொறிகள் ஐந்தையும்
புறஞ்செலா
தடக்கியோர் நெறிக்கே
குறிகொ ளும்படி
செலுத்துபே ராளர்தங்
கோள்போல்
பிறிவு றும்பல
மடைகளிற்
பிழைத்திடா
தொதுக்கிச்
செறித ரும்புனல்
முழுவதும்
அகன்பணை
செறிப்பார் 69

97 உழுதற் சிறப்பு
பழியில் நீங்கிநன்

கீட்டிய பசும்பொருள்
சிறிதுங்
கழிப டாதுநல்
வழிப்பயன் படுவது
கடுப்பக்
கொழிதி ரைச்சுவைப்
பாலியின் குளிர்புனல்
முழுதும்
வழுவு றாதுகால்
வழிச்சென்று
வளவயல் நிறைக்கும்
98 கண்ண கன்புவி
முழுதுமாங்
கடுங்கொலை
அவுணன்
அண்ணல் மார்பகம்
பிளப்பவர் போலவிர்

மணியின்
வண்ண வன்கடா
நிரைநிரை யாத்துவன்
படையாற்
பண்ணை தோறுநின்
றுழுநர்கம் பலைகளே 71
எங்கும்
99 மருவு சால்தொறும்
வெருவிமுன்
குதித்தெழு வாளை
இரும ருப்பிடை
உதைந்துழும்
எருமையைத் தடுக்கும்
பருவ ராற்குலம்
ஒய்யெனப்
பாய்ந்தெழுந்
தலைக்கும்

உருவ வாற்புறத்
துதைந்துவல் 72
விரைந்தெழ உந்தும்
100 பூண்ட வன்கொடுந்
தானவன்
ஆக்கைபோழ்ந்
திடலுங்
காண்ட கும்புவி
தன்னிறங் காட்டிய
தென்னக்
கீண்ட சால்தொறுங்
கேழ்கிளர் தமனியங்
கிடந்து
மாண்ட பேரொளி
வயங்கிநீள்
கனையிருள் மேயும் 73
101 நாற்று விடுதற் சிறப்பு

வேறு செய்துபின்
பொருத்துறும்
வினைவல அமைச்சிற்
கூறு செய்ததண்
சேறெலாங் குழப்பி
ஒன்றாக்கிச்
சாறு செய்துவா
சவற்றொழு துறும்மிடர்
தவிர்த்து
நாறு செய்கென
வெண்முளை வித்துவர்
நாளால் 74

102 முளைநீர் வடித்தற்
சிறப்பு
அருள்வி ளங்கலும்
உடல்பொரு ளாதிய
பந்தந்

தரும வன்புடை
யெய்துறக்
கொடுத்திடுந்
தகைபோல்
பெருக யாத்தநீர்க்
கலங்கல்போய்த்
தெளிந்தபின் முழுதும்
மருவு கால்வழி
வடிந்துறக்
கவிழ்ப்பர்கள் மள்ளர்
103 முளைநீர் பாய்ச்சுதற்
சிறப்பு
கலிவிருத்தம்
இளமகப் பசிதனக்
கேந்து கொங்கைபால்
அளவறிந் தூட்டுதாய்
மான ஆறறி

களமர்கள்
முளைப்புனல் செவ்வி
கண்டுநீள்
வளவயல்
பாய்த்தித்தம் மகவின்
ஓம்புவார் 76
104 நாற்று நடுதற் சிறப்பு
ஓரிடத் துயிர்த்ததன்
பறழை ஓம்புவான்
பாரிடைப் பல்வயின்
உய்க்கும் பூஞைபோல்
காருடற் களமர்கைந்
நாறு வாரிப்போய்ச்
சீருடைப்
பணைதொறும் நடுதல்
செய்வரால் 77
105 பயிர் பசத்தற் சிறப்பு

மரகதந் தளிர்த்தென
வளர்பைங் கூழ்செறி
தரநிறை கழனியுள்
சங்கம் ஊர்வன
பரவைநீர்
மேய்ந்தெழும்
படலைக் கொண்டலுள்
சரமதி நுழைந்துசெல் 78
காட்சி சாலுமால்
106 களை பறித்தற் சிறப்பு
களமர்கள் களைகளை
பருவங் காட்டலும்
இளமயில் வயல்வளங்
காண எய்தியாங்
குளமகிழ் கூர்தர
உழத்தி மாரெலாம்
வளமலி

பணைதொறும் வந்து
முற்றுவார் 79

107 அம்புயம் உற்பலம்
ஆம்ப லாதியாம்
பைம்புதற் களையறப்
பறித்த தம்முருக்
கொன்புனல்
தோன்றலுங் கொய்த
புன்களை
பின்பினும்
முளைப்பதென்
பெயர்த்தென் பார்சிலர் 80

108 பங்கயம் ஆம்பல்உற்
பலத்தில் தேனுண்டு
தங்கிய வண்டினந்
தமது வாள்முகஞ்
செங்கனி வாய்விழி

சேர்ந்து மூசுற
அங்கவை கட்டெறிந்
தகற்று வார்சிலர் 81

109 பாயிதழ்த் தாமரை
பறித்தங் கொப்புமை
ஆயுந ரெனமுகஞ்
சேர்த்தி ஐதுதேன்
வாய்மடுத் திணையில
தென்று மாற்றல்போல்
மீயுயர் கரைப்புறம் வீசு
வார்சிலர் 82

110 இணைவிழிக்
கிணையிலை யென்ப
தண்மையின்
அணுகிநீ காணென
அழைத்துக்
காட்டல்போல்

பிணையுநா
சியினெதிர் பிடித்து
மோந்துதேன்
தணிவிலுற் பலம்முடி
சார்த்து வார்சிலர் 83

111 சைவலங் களைகுவான்
குனியத் தாழ்குழல்
எய்தியெம்
இனத்தினை
ஒறேல்மின்
என்பபோல்
கைமிசை விழுந்துசிக்
குண்ணக் கால்நிமிர்த்
தையபூங் குழல்முடித்
தணைகின் றார்சிலர் 84

112 நறுமலர்ப் பங்கயங்
களைய நாரியர்

கறுவொடு முள்ளரைக்
காம்பு பற்றலும்
தெறுகரங் கிழியப்புண்
செய்யு மேதமக்
கிறுதிசெய்
வார்க்கெவர் இடரி
ழைத்திடார் 85

113 அலமரு விழியின
மாமெ னாமுக
மலர்மிசைப் பாய்தரு
கயலும் மாண்டதன்
குலமெனப் புறவடி
கூடுங் கூர்மமும்
இலவிதழ்க் கடைசியர்
எளிதில்
கைக்கொள்வார்

86

114 பறிதரக் களைந்தெறி
பாவை மாரையம்
மறிபுனற் குவளைகால்
வளைத்துப் பாம்பென
பொறிவெரு
வுறச்செயும்
புடைப்பின்
மொய்ம்பிலாச்
சிறியருந் தம்மினாந் 87
தீங்கி ழைப்பாரே
115 களிபடு சுரும்புளர்
கமலக் கஞ்சமும்
நளிபடு குவளையும்
நனைகொள் ஆம்பலும்
தளிரியற் கடைசியர்
முழுதுஞ் சாடுவார்
அளிமரு வலர்க்கெவர்

அன்பு செய்குவார் 88
116 புரைதபு பசும்பயிர்ப்
பொலிவுங் கங்கெலாம்
நிரைநிரை கிடந்தபல்
நிறத்த பூக்களும்
வரைதவழ்
முகில்களும் வான
விற்களும்
தரையிடைப்
பயன்பெறச் சார்ந்த
தொக்குமால் 89

117 இருள்முகி லுறழ்பயி
ரிடையெ லாந்தடித்
துருகெழ வயங்கியாங்
குலவும் அந்நலார்
திருமலர்ப் பதமெல்லப்
பெயர்த்துத் தேங்குழற்

கருஞ்ஞிமி றார்த்தெழக்
கரையில் ஏறுவார் 90

118 தெறுங்களை கட்டநீர்ச்
செறுவிற் பண்டுபோல்
நறுங்களம் போருகச்
சேக்கை நாடிவந்
துறுங்களி ஓதிமம்
உயங்கி வாடுவ
வறுங்களம் நாடியுள்
மறுகு மாந்தர்போல் 91

119 கொள்ளைபோய்
நனிவறங் கூர்ந்த
காலையும்
வள்ளியோர்
விருந்தினர் வாடக்
காண்பரோ
கள்ளறா மலர்வள

மிழந்துங் கார்வயல்
வெள்ளனம் மகிழமீன் 92
விருந்து நல்குமால்

120 பயிர் வளர்தற் சிறப்பு

மண்ணக மகளிர்கை
வண்மை கண்டயாம்
விண்ணக மகளிர்கை
மேன்மை
காண்டுமென்
றெண்ணீமேற் சேறலுற்
றென்ன வான்பயிர்
கண்ணிறை
கவின்செழித்
தோங்குங் காட்சித்தே 93

121 கதிர்விடுதற் சிறப்பு

தரவு கொச்சகக்
கலிப்பா

ஈன்றெடுத்தோர்
குணம்மகவுக்
கியையுமுறைப்
படிவித்தின்
தோன்றுமுளை
முன்விளர்த்துப்
பின்பசந்த
தொடர்பினால்
ஆன்றசெழுங்
கதிர்களுமுன்
தூவெள்ளை
யாயெழுந்து
மான்றுமர கதமேனி
வாய்த்துமடல்
கிழித்தெழுமால் 94 94
122 கதிர் முற்றுதற் சிறப்பு
அரமகளிர்

அங்கைவளம்
அறிபாக்கு
மேற்போந்து
திரையெறிநீர்க்
கடல்வரைப்பின்
தெரிவையர்கைக்
கிணையொவ்வா
மரபுணர்ந்து
மீண்டென்ன
வான்நோக்கிக்
கதிர்த்தெழுந்த
பரவுபுனல் தடஞ்சாலி
பார்நோக்கி
இறைஞ்சுமால்
123 பேதைமையில்
ஆடவர்முன்
வளைவின்றிப்

பெதும்பைமையின்
மேதகச்சற்
றெனவணங்கி
மங்கைமையின்
மிகநாணும்
மாதரைப்போற்
பைங்கூழின்
மன்னனெதிர்
கதிர்த்தெழுந்த
ஏதமிலாக்
கதிர்முதிர்ந்து
வரவரக்கீழ்
இறைஞ்சுமால் 96
124 உருத்திட்ப
முறாக்காலைத்
தலைநிறீஇ
உற்றதற்பின்

தருக்கற்று
நனிவணங்கிப்
பழுத்தகதிர்த்
தடஞ்சாலி
“பெருக்கத்து
வேண்டுமால்
பெரும்பணிவு
மிகச்சிறிய
சுருக்கத்து
வேண்டும்உயர்”
வெனுமொழியின்
சுவைதேற்றும்
விளைச்சற் சிறப்பு
தூமதிவாக் கியகிரணந்
துளிர்த்தென்னக்
கதிர்ச்சாலி
காமர்மணித் தரளங்கள்

கான்றுசெறுத்
திடராக்கிப்
பூமலரக் கால்யாத்த
புனல்முழுதும்
புறங்கவிழ்த்து
மாமைநீர்
புலர்த்தவரும்
மள்ளருளம் 98
மகிழ்விக்கும்
126 வணங்குகுலைக்
கதிர்ச்சாலி சிலையாக
வளர்பதடி
உணங்குகதிர்
கணையாக
ஒளிர்முளரிக் கரம்பற்றி
இணங்குபசுங்
குரல்கவர

வரும்புட்கள்
இரிந்தோட
அணங்குபுரிந்
தெதிர்கண்டோர்
அதிசயிப்பச் 98
செயும்பணைகள்
127 பாலொளிநீத்
தெழும்விடத்தான்
முகில்வண்ணம்
படைத்திருந்த
மாலவனார் கலிக்கச்சி
வந்தெய்தித்
தவமுஞற்றி
மேலைஉருச்
சிவந்தென்ன
வெள்ளொளிபோய்ப்
பசந்தெழுந்த

சாலியெலாஞ்
செங்கனக
நிறம்வாய்ந்து
தழைக்குமால் 100

128 நெல்லரிதல் சிறப்பு

அறுசீரடியாசிரிய
விருத்தம்

நாவலோர்
புனைந்துரைக்கும்
நலமுழுதும்
    அமைந்துவட
நாகஞ்சூழ்பொன்
நாவலோ எனவியப்ப
    அரிபருவம் நாடித்
தெண்ணீர்
நாவலோன்
உளங்களிப்பப்

படியெடுக்குங்
குண்டைநகர்
உழவர் போல்வார்
நாவலோ
எனவிளிப்பத்
வினையின்
மூள்வார்

101

129 கலிவிருத்தம்
ஒருவ ருக்கொரு
செல்லலுற் றால்
தருகு ளார்க்கும்
அடுப்பது திண்ணமே
கருவி மள்ளர்
கதிர்க்குலை
தன்னொடும்
பருமென் பூக்களும்
பற்றி அரிகுவார்

102

130 அரிவர் சேர்ப்பர்
அடுக்குவர் சிக்கென
வரிவர் சென்னியில்
வைப்பர் களஞ்செலப்
புரிவர் பொன்னங்
கிரியெனப்
போர்செய்வர்
பிரிவர் மீள்வரிப்
பெற்ரியர் எங்கணும் 103

131 நெல்கதிர்ப்போர்ச்
சிறப்பு
சிறைசெய்தீம்புனல்
நாட்டிறை செற்றுமுன்
சிறைய ரிந்த
வரைகளைச் சீற்றத்தால்
சிறைசெ யக்கரு

தித்தன் நிலத்தொரு
சிறைவைத் தாலெனப் 104
போர்கள் சிறக்குமால்
132 கடாவிடுதல் சிறப்பு
வெற்பெ லாமண்ணின்
வீழ்த்து வலாரிதன்
ஒப்பில் ஊர்தியை
ஏவிஒ றுத்தல்போல்
பற்பல் போர்கள்
சரித்துப் பகட்டினம்
முற்பி ணைத்து
நடத்துவர்
மொய்ம்பினோர்
105

133 நெற்ப லாலத்தின்
நீங்கிய தோவெனப்
பற்பல் கால்முகங்
கோட்டின்

பார்ப்பபோல்
பொற்பவாயினிற்
பூங்கதிர் கவ்வுபு
சொற்ப கட்டினஞ் சுற்றி
உழக்குமால் 106
134 உடலி னாவி
பிரிந்தென
ஊழ்வினைத்
தொடர்பு நீங்குவ
தொப்பத்
தொகுத்தநெற்
படலை வையினில்
நீங்கப் பகட்டினம்
அடைய வுந்தொடர்
நீங்கி அகலுமால் 107

135 தூற்றுதற் சிறப்பு
வைய கற்றி

வளியெதிர் தூற்றலும்
பொய்ய கன்றவர்
ஐம்பொறி
போதல்போல்
கைய கன்று கழிவைப்
பொடியொடும்
ஒய்யெ னப்பதர்
அப்புறத் தோடுமால் 108
136 பயன்கொள்ளுதற்
சிறப்பு
அறத்து நூல்வழி
ஆற்றுவ ஆற்றியத்
திறத்தின் எஞ்சிய
செந்நெற்
குவையெலாம்
குறித்தெ டுத்துநெற்
கூடுய்த் தறச்செயல்

மறப்பி லாத வளக்குடி 109
எங்கணும்
137 குறைய வித்தின
கொண்டு குடியெலாம்
நிறையச் சாலி நிரப்புவ
பூம்பணை
இறைய ளித்த
இருநாழி
நெற்கொண்டே
அறமெ லாம்நிறை
விக்கும் அமலைபோல் 110
138 கொடுப்ப கொண்டு
பெருக்கிக்
கொடுத்தலால்
அடுத்த வாணிகர்
போலும் அகன்பணை
உடுத்த சோலைகள்

உம்பர் கடவுள்நீர்
மடுப்ப தென்ன
வளர்ந்தெழுந் 111
தோங்குமால்
139 கலிநிலைத்துறை
கொண்டல் உகுக்கும்
ஆலி நிகர்ப்பக்
குளிர்பாளை
விண்டு முகைக்கும்
பைங்கமு கெங்கும்
விளையாட்டு
வண்டலர் கொங்கைக்
கிடையிள நீர்மற்
றவர்காணா
தண்ட மிசைக்கொண்
டெய்தி அளிக்கும்
வளர்தெங்கு 112

140 செற்றெயில் வென்றார்
தேர்மிசை மேற்போக்
கெனமென்பூத்
துற்ற பொதும்பர்த்
துறையின் இனத்தாற்
செருவேற்றுப்
பற்றிய வாவி நீங்குபு
பைந்தே னடைகீறி
உற்றெழு வாளை
பொருதுயிர் விண்டார்
கதிகாட்டும் 113
141 போதுகள் மேய
நெடுங்கய மேவு
புனிற்றுக்கார்
மேதியை ஆயிடை
வாளை வெகுண்டு
விசும்பேறிப்

பாதி வெரிந்புறம்
உட்குழி யக்குதி
பாய்ந்தாடி
மீதுயர் திண்கரை யேற
உகைக்கும் 114
வியப்பிற்றால்
142 சுவையொளி ஊறொலி
நாற்றமென் ஐந்தின்
தொடர்பற்றிக்
கவர்படு நெஞ்சில்
திரைதிரை தோறுங்
கடைநீர்நாய்
துவள எழும்பா
முறைமுறை கீழ்நீர்ச்
சுழல்காட்சி
எவரும் இரும்பூ
துறவுள வேரித்

தடமெங்கும் 115
143 கரைத்துறு தண்பூங்
காஞ்சிகள் சாகைக்
கரமோச்சி
விரைத்த கரும்பைத்
தைவரு தோற்றம்
விரிதார்வண்
டிரைத்தெழு
திண்தோள் கேள்வரொ
டூடும் இளையார்மேல்
நிரைத்தமர் செய்வான்
வேள்சிலை பற்றும்
நிகழ்விற்றால் 116
144 மேதகு செவ்வணி
தாங்கினர் செல்லுமின்
னன்னாருந்
தீதற வெள்ளணி

பூண்டுசெல் சேடிய
ரானோரும்
போதலும் மீள்தலு
மாய்ப்பொலி வீதிகள்
எங்கெங்குங்
காதல்செய்
சேரிமடந்தையர்
உள்ளங் கவல்விக்கும் 117
தசும்புறழ்
கொங்கையொ
டெம்பெரு மான்மகிழ்
தண்பாகூர்
விசும்பை உரிஞ்சு
மதிற்றிரு வல்லம்
விரைச்செந்தேன்
அசும்பு தடம்பொழில்
ஏனைய வைப்பும்

அனந்தஞ்சூழ்
பசும்பணை மாமரு 118
தத்தொழில் யார்பகர்
கிற்பாரே

146 **5.** நெய்தல்

கலிவிருத்தம்

அம்மருத வைப்பினை
அடுத்தகழி நெய்தல்
மம்மர்விட வாலமர
னுக்குதவு மாற்றால்
நம்மின
மெனப்பொய்ம்மொழி
நாடியுரை கைதை
சும்மைய அளக்கரொடு
சூழ்ந்துறவு கொள்ளும் 119
147 கண்டல்மட லேறவலர்
தூற்றுகமழ் புன்னை

உண்டுநறை காலும்
ஒத்துடன் இசைக்கும்
வண்டுளர் அரும்புவிரி
நெய்தல்மண மிசையுங்
குண்டுகழி
மேய்பறவை
நோக்கிமகிழ் கூரும். 120
148 கண்டுமொழி யாரவய
வத்தெழில் கவர்ந்து
தெண்டிரை அளக்கரின்
ஒளித்தது தெளிந்து
கொண்டதுறை
யோர்கடல் குளிப்பர்
துகிர்சங்கம்
வண்டரளம் வாரிமட 121
வாரெதிர் குவிப்பார்
149 எம்மிடை

உறுப்பெழிலை
வவ்வினிர்க
ளென்னாக்
கொம்மைமுலை
வம்பணி பரத்தியர்
வெகுண்டு
விம்முவலை
சேல்பவளம்
வெண்டரளம் மற்றும்
அம்மபிறர்
கொள்ளவிலை 122
யாற்றிமகிழ் கூர்வார்
கண்ணெழில்
கவர்ந்தகடல் மீன்களை
உணக்கும்
உண்ணமிழ்த
மன்னமட வார்பறவை

ஒப்பும்
பண்ணிசை
மடுப்பவிழை
பவ்வமும் அருக்கன்
விண்ணெழு
பகற்பொழுதின்
மெல்லென ஒலிக்கும் 123
151 தணந்தவர்கள் ஆருயிர்
வருத்தவிறல் சாற்றி
மணந்தழுவு
தும்பைமலர் சூடியடல்
மாரன்
அணங்கமர்செய்
காலமென ஓர்ந்துமுர
சாழி
இணங்குற
இராப்பொழுதின்

மிக்கொலி எழுப்பும் 124
152 வீழ்ந்தவர் தணத்தலின்
விழிப்புனல் உகுத்துத்
தாழ்ந்தழு திரங்குமட
மாதர்தமை நோக்கி
ஆழ்ந்தகழி மாதுமுடன்
நின்றழுவ தென்னச்
சூழ்ந்துபுள் அரற்றமலர்
தேத்துளி துளிக்கும் 125
153 நலம்பயில்
பொருட்குமலி
வங்கமிசை நண்ணும்
புலம்பர்வரு கின்றவழி
நோக்கினர் புலம்பி
இலம்படு
மடந்தையர்க
ளின்னுயிர் தளிர்ப்ப

அலம்புகுளிர்
பூந்திவலை வீசுமலை
வாரி 126

154 புன்புற மதத்தரும்
வியந்துபுகழ் செய்ய
என்பையொரு
பெண்ணென
இயற்றுநகர் ஒற்றி
நன்பதி முதற்பல
உடுத்தநளி நெய்தல்
தன்பெருமை யாவரள
விட்டறி தரத்தோர் 127

155 திணைமயக்கம்
அறுசீரடி யாசிரிய
விருத்தம்
திருத்தொண்டை

நன்னாட்டு நானிலத்
தந்திணை வளமுந்
தெரித்துக் காட்ட
மருத்தொண்டை
வாய்ச்சியர்சூழ்
குன்றை
நகர்க்குலக் கவியே
வல்லா னல்லாற்
கருத்தொண்ட
ரெம்போல்வா
ரெவ்வாறு
தெரிந்துரைப்பார்
கலந்தார்க் கின்பம்
அருந்தொண்ட
ரணியிலவை
றியைந்தனவு
மாங்காங் குண்டால் 128

156 வரைப்பிண்டி
மலர்தூவி
செதிர்சொரிந்த
மலருண் மூழ்கி
நிரைக்கும்பூங்
கணைதூவி
மதனெம்மான்
விழிநெருப்பு
ணிற்றல் காட்டும்
வரைத்துன்று
கறிக்கொடிபோய்க்
கடுக்கைமிசை
மரகதத்தோ
ரணம்போல் தாவி
நிரைக்கிள்ளை
வாரணமும்
எதிர்நடப்பப்

பொருநர்நெடுங் 129
கயிறு காட்டும்
157 சுற்றெல்லா
மலர்முல்லை
தகைந்துபெருந்
தூறுசெய
அதன்கீழ் எண்கு
பற்றிநுழைந்
துறங்கநடு
வளர்கொன்றை
மிசைக்கறிதாய்ப்
படரும் தோற்றம்
உற்றரக்கன்
வெள்ளிமலை
எடுத்தநாள்
வெரீஇத்தழுவும்
உமையா ளோடும்

கற்றைவார்
சடைப்பெருமான்
நின்றநிலை
        காட்டுவதும்
உண்டால் அங்கண் 130
158 தாம்பயிலும்
வரைக்கிளைத்த
செயலைமலர்
        கவர்மாரன்
தன்மேல் சீறி
ஆம்பலினங்
கழனியிற்போய்
அவன்சேமச்
        சிலைக்கரும்பை
அழித்துண் டார்க்கும்
பூம்படுகர்ப்
பகட்டினங்கள்

வெகுண்டெழுந்து
மலைச்சாரற்
புனிற்று வாழை
தேம்பயில்செந்
தினையனைத்தும்
அழித்துழக்கி
மேய்ந்துவக்கும்
செவ்வித் தோர்பால் 131
159 வரைக்குறக்கன்
னியர்புனத்துக்
குருகோட்டும்
கவண்மணிக்கல்
மருதத் தெண்ணீர்த்
திரைக்கயத்துத்
திடர்செய்ய
அந்நிலத்துச்
சிறுமகார் சினமீக்

கொண்டு
விரைத்தகுழற்
பேதையர்கள்
　　டயர்துறையின்
மேவிப் பந்தும்
நிரைக்கழங்கும்
அவரலறப்
பறித்தெறிந்து
　　நீர்ச்சுனையைத்
தூர்ப்பார் அங்கண் 132
தாமுமொரு
பயப்படார்
பயப்படுவார்
　　தம்மையுந்தம்
போற்செய் வார்போல்
காமரளி நுகராமற்
கழிப்பூமே

லடுக்கலுறுங்
கணிதே னூற்றும்
ஆமிதனை
அறிந்துவெகுண்
டெழுந்தென்ன
அணிவேங்கைக்
குடுமி தன்னை
நாமநீள் கடல்பவளக்
கரநீட்டிப்
பற்றியிடு நலமும்
ஓர்பால் 133
161 அலைக்காகம்
மலைசாரற்
பலாச்சுளையைக்
கவ்வியெழுந்
தரக்கர் கோமான்
சிலைத்தாச

ரதிமனையைக்
கொண்டகன்றா

லெனலெனவங்கஞ்
சேரும் அந்நாள்
நிலைப்பான
மதிலிலங்கை
மிசைத்தாவும்

அனுமனைப்போல்
நீள்வால் மந்தி
மலைப்பால்நின்
றலைத்தோணி
பாய்ந்துழக்கி
மீண்டெய்தும்
வாழ்வும் அங்கண்

162 இடைச்சியர்பால்
நடைகற்பச்
செல்வதென
வயல்மேவும் எகின
மெல்லாம்
படைத்தவளம்
பாடியிற்போய்
ஆன்பாலை
வாய்மடுத்துப் பையுள்
நீங்கும்
மடைத்தலைசூழ்
வயல்மகளிர்
மொழிபயிலப்
போவதென வனத்துள்
வாழும்
பெடைக்குயில்போய்ப்
பணைக்கமுகின்

கனிதொண்டைக்
கனியென்னப் பேணும்
ஓர்பால்
163 கொடும்பரவர்
கழியுழக்கக்
குதித்தெழுமீன்
ஆய்ச்சியர்பாற்
குடத்துள் வீழ்ந்தங்
கடும்பயத்தோ
டலமருமற்
றவர்கடையுந்
தயிரோதைக்
கலமந் தோடி
ஒடுங்குமுயல்
கைதையினுள்
அடங்கியங்கட்
கடலொலிகேட்

டுள்ளம் மாழ்குங்
கடுங்கருமத்
தொடரந்தோ
யாங்குறினும்
விடாதென்னக்
காட்டும் ஓர்பால் 136
164 இடுமிடைக்
கடைசியர்கள்
களைந்தெறிந்த
நறுங்கமலம்
இரைக்கும் முந்நீர்ப்
படுதிரைமேல்
வயங்குதலுங்
கடல்முளரி
பூத்ததென்வன் பாரீர்
என்பார்
உடைதிரைநீர்க்

கடல்கிளைத்த

துகிர்க்கொடிபோய்ப்
பழனமிசை ஒளிரக்
கண்டோர்
கடிவயலுந் துகிரீன்ற
தென்னென்பார்
இப்பரிசு கவினும்
ஓர்பால் 137
வரைப்புறத்துப்
பசுங்கிளியுங்
கான்குயிலும்
உடனான்பால்
மடுத்துப் புட்கள்
இரைத்தெழுபூம்
பணைமருதச்
சேக்கைமிசை

எதிரெதிருற்
றிசைபாடும்
நிரைக்குடுமி
வரைப்பகடும்
வயற்பகடும்
கரும்பொடித்து
நெரித்து மாந்தித்
திரைத்தடநீர்க்
கான்யாற்றுத்
திளைத்தாடி
உடனுறங்குஞ்
செவ்வித் தோர்பால் 138
166 புறவகத்த
குமிழ்ம்போதும்
கழிக்கானற்
கைதைதருங்
பொலங்கேழ்ப் பூவும்

தறைபொறுத்த
வரைதோன்றித்
    தண்மலர்மே
லிருபுடையுந் தாங்கி
நின்றே
யிறைவனுக்காம்
மலர்மோந்தாள்
    மூக்கரிந்து
சுரிகையுட னேந்தி
யந்நாள்
முறைநிறுத்த
செருத்துணையார்
நின்றநிலை
    காட்டிவள
முகிழ்க்கும் ஓர்பால் 139
167 விண்முட்டுங்
குடிமிவரைத்

திகிரிபடும்
        வெண்முத்தும்
வேலைச் சூழல்
மண்முட்ட
நறும்புன்னை
உகுமரும்புந்
        தலைமயங்கி
அவற்றுட் சேர்ந்த
தண்முட்டை
இதுவென்னப்
பகுத்தறிய
        வல்லாது தளர்வு
கொண்டு
கண்முட்ட
வளம்படைத்த
வயலன்னந்
        துயர்கூருந்

காட்சித் தோர்பால்
168 குறுஞ்சுனையிற்
களிவண்டு
சுழன்றாடுங்
கான்குயில்கள்
குரைநீர்ப் புன்னை
தொறும்பொதுளுங்
கருங்கொடிதன்

குடம்பையிற்போய்க்
கருவுயிர்த்துச்
சுலவி மீண்டு
நறும்பிரச
மலர்க்காஞ்சிச்
சினையேறி
ஒளியிருந்து நாடிக்
காலம்

உறுந்துணையும்
இனிதுறையும்
உலவாத
வளங்காட்டி
ஓங்கும் ஓர்பால் 141
169 கறிக்கொடியும்
துகிர்க்கொடியும்
நெடுவயலைப்
பசுங்கொடியுங்
கமழ்தேன் மௌளவல்
வெறிக்கொடியும்
நாற்றிசையுந்
தாய்ப்படர
நடுவளர்ந்த
விரைக்கு ராமேல்
கிறிக்கொடிய
பெருங்காற்றாற்

பல்காலும்
அசைபாவைக்
கிளர்ச்சி வாள்கண்
மறிக்கொடியுங்
கூத்தியர்செய்
கயிறுவிசி
கழைக்கூத்தின்
வயங்கும் ஓர்பால் 142
இனியநா ளிலமடுத்த
வளாகமெலாம்
பெருங்குடிகள்
இயல்பின் ஓங்கித்
திணையளவும்
முறைபிறழாத்
தொண்டைநாட்
டணிமுழுதுந்
தெரித்துக் கூறக்

கனைதிரைநீர்க்
கடலாடை
நிலவரைப்பின்
யாருளரோ கற்ப
நாட்டுந்
தனைநிகர்பா
தலதலத்தும் அன்னதே
யெனிற்பிறிது
சாற்று மாறென் 143
171 எந்நாட்டுப்
பெருவளமும்
எவ்வெவர்கோட்
பாடுகளும்
இயம்பவல்ல
பொன்னாட்டுப்
பொன்செருக்கும்
பன்னாக்குப்

பணிச்செருக்கும்
போக்கு மிந்த
நன்னாட்டைப்
புலவரெலாந்
தொண்டைநா
டெனவுரைப்பர்
ஞால மங்கை
தன்னாட்போ
தனையமுகக்
கனிவாயாங்
காரணத்தின் 144
சார்பாற் போலும்
172 சலதியுடைச்
சேயிழைக்குத்
தமிழ்நாடே
மதிமுகமாத்
தமிழ்நாட் டுள்ளு

மலர்புகழ்த்தண்
டகநாடே கனிவாயா
வதனுள்ளுஞ் சாதி
பேதங்
குலவுமா
ருயிர்க்கெல்லாந்
தத்தமது
மரபொழுக்கங்
குடங்கை சேரா
மலகமெனத்
தேற்றுதலின்
நாவெனலாங்
காஞ்சிநகர் 145
வண்மை சொல்வாம்

திருநாட்டுப்படலம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 172

-----

---

## 2. திருநகரப்படலம் (173-298)

173 அறுசீரடி ஆசிரிய விருத்தம்

கச்சிமா நகரோர்
தட்டுங் கடவுளர்
நகரோர் தட்டும்
வைச்சுமுன் அயனார்
தூக்க
மற்றது மீது செல்ல
நிச்சயம் முறுகித்
தாழ்ந்து நிலமிசை
விழுமிவ் வூரை
இச்சகத் தூர்களோடும்
எண்ணுதல்

மடமைப் பாற்றே. 1

174 கவினெலாந் திரட்டிக்
காஞ்சிக்
கடிநகராக்கிக்
கஞ்சத்
தவிசினோன்
அதன்பால் நுட்பத்
தொழில்செயச்
சார்ந்த காலைப்
புவியிடைக் கழிந்த
சேடம்
பொற்பவே
றெடுத்து விண்ணா
டவிர்தரச் செய்தான்
போலும்
அன்றிவே
றுரைப்ப தென்னோ 2

175 ஆதிநாள் முக்கண்
எம்மான்
அயன்றனைப்
படைத்து வேதம்
ஓதுவித் தருளின்
நோக்கி
உலகெலாம்
படையென் றேவும்
போதிது பார்த்திவ்
வாறு படையெனப்
புகன்று வைத்தான்
ஈதென லாகுங் காஞ்சி
யென்னுரை 3
யளவைத் தாமே.
176 இந்நகர் நோக்குந்
தோறும்
இமையவர் தமது

நாடு
நன்னரென் றிருந்த
தம்மைத்
தாங்களே நாணி
வைவர்
முன்னொரு சமயந்
தன்னைப்
பொருளென
முற்றி நிற்றோர்
பின்னர்வான் சைவம்
எய்தப்
பெறினவர் பேசு 4
மாபோல்
177 நீடுமிந் நகரம் மன்னர்
நெடுந்தவம்
முயல்வோர் வான
நாடர்தம் பதமுங்

கஞ்சன்
நாரணன் வலாரி
வைப்பும்
பாடிரி கான்ற சோறாக்
காண்பதிப்
பதியின் வண்மை
கோடியில் ஒருகூ
றொவ்வா
அவையெனக்
குறித்தே யன்றோ

178 எழுசீரடி யாசிரிய
விருத்தம்
சுரும்புகா லுழக்க
முகையுடைந்
துளித்ததீஞ்
சுவைமதுப் பிளிற்றும்
அரும்பெறற் சோலை

மீமிசைக் கருவி
முகிற்குழாம்
அடர்வபாட் டளிக்கு
விரும்புதேன்
அளியாக் கற்பக
வெல்லுவான்
வருவதோர்ந் தஞ்சித்
தரும்புகழ் வலாரி
ஊர்தியைச் செலுத்தித்
தடுத்திடை
மடக்குதல் மானும். 6
179 நறவ மூற்றெடுப்பச்
சிறகர்வண் டிமிரும்
நளிபொழில்
இடும்பைகூர்ந் தழகு
குறைபடப் பொதிந்த
குயின்களை

குதித்தெழுந்
துதைத்துதைத் தகற்றி
நிறைபுனல் தடத்துப்
பிறழ்தருங் கிழமை
நெட்டிள
வாளைமீன் றனக்குத்
துறைதொறுங் கைம்மா
றெனக்கனி
செழுந்தேன்
சொரிவன நெடுமரப் 7
பொதும்பர்
வண்டலாட் டயரும்
வாள்மருள்
நெடுங்கண்
மங்கையர் நெறிசுரி
கூந்தற்
கொண்டலைக் காணுந்

தொறுந்தொறும்
அவர்தங்
கோமளச் சாயலுக்
குடைந்து
தொண்டுபூண்
டெதிர்நின் றாடுவ
தேய்ப்பத்
தோகைமா
மயில்நடங் குயிற்றுந்
தண்டளிர் துவன்றிப்
படுநறாத்
ததைமலர்ச்
சாகையம் பொதும்பர் 8

181 வாம்பெருந் திரைய
தடம்புடை யுடுத்த
வளம்பொழிற்
சாகைகள் தோறும்

தீம்புனல் குடையும்
மாதரார் முன்னாள்
செறித்தபட்
டாடைபொன்
அணிகள்
பூம்புன லகத்தில்
தோன்றலும்
இளையோர்
புனலர மகளிரென்
றஞ்சிக்
கூம்பிய கரத்தர்
அந்நலார் நகைப்பக்
குலைமிசை
நோக்கிவெள் குவரால் 9

182 கொங்கவிழ்
பொதும்பர்க்
கொழுமுகை யுடைந்து

குளிர்மதுச்
சொரிதலின் ஆழ்ந்த
பங்கயச் சேக்கை
மீமிசை எகினம்
பைப்பய
மேனிவந் தெழுவ
பொங்குவெம் பாவக்
கருமுருட்
புணரியுள்
சிலையுடன்
அமிழ்ந்தும்
எங்கள்வா கீசர்
அஞ்செழுத் தருளால்
எழுந்துமேல்
வயங்குதல் மானும்

183 யானைக்கூடம்
கலிவிருத்தம்

முறைமுறை
பனைக்கை நீர்முகந்து
வாய்மடூஉ
நிறைதடங் குறைதட
மாக்கு நீண்டவெண்
பிறைமருப்
பொருத்தல் மாமதப்
பெருக்கினால்
குறைதட நிறைதட
மாக்குங்கொள்
கைத்தே 11

184 தாமுறை யிடந்தரி
யலர்கட் கீந்தவர்
தாமுறை இடங்களில்
தங்கி ளைக்குலந்
தாமுறப் பரிவருத்
தனைசெய் வேழங்கள்

தாமுறை முறைதிரி
தண்டம் எண்ணில 12
185 மழைப்புனல்
தங்கள்மே லூற்று
மாமுகில்
உழைச்செல
வெகுண்டெதிர்
இறைப்ப தொப்பநீள்
புழைக்கையில்
நிறையநீர் முகந்து
போர்மதத்
தழைச்செவிக்
கரிகள்விண் தலத்து
வீசுவ

13

186 கறையடிச் சுவடெனுங்
கனக வட்டில்கள்

நிறையவாக் கியமத
நீரைச் செல்வர்போல்
சிறையளிக்
குலமெலாந் தெவிட்ட
உண்டுவாழ்ந்
தறைபெரு வளத்தன 14
ஆம்பல் வீதியே
187 கொடையினிற்
கீழ்ப்படுங் கொண்டல்
யாவையுந்
தடைபடச் சிறையிலிட்
டாங்குச் சார்கடு
நடையிரு முறச்செவி
நான்ற வாய்க்களி
றடையவும் பிணித்தன்
அளவில் கூடமே 15
188 குதிரைப்பந்தி

கரியுமிழ் விலாழியுங்
காய்சி னக்கடும்
பரியுமிழ் விலாழியும்
பாய்ந்து சேறுசெய்
தெருவெலாம்
அந்நலார் சீற டிச்சுவ
டுருகெழு தாமரைத்
தோற்றம் ஒக்குமே 16
189 சுலவுகொய் யுளைச்
சுவடு தோறும்மேல்
கலனையின் உக்கசெம்
மணிக திர்ப்பன
பலசுடர்த் தகழிகள்
பரப்பி வைத்தெனக்
குலவுநல் வளத்தன
குந்த வீதியே 17
190 மல்லரை மயில்களை

வான ரங்களைப்
புல்லிய முயல்களைப்
பொருச ரங்களை
வல்லவா புறக்கொடை
கண்ட வான்கதிப்
பல்லியல் புரவியின்
பந்தி யாயிரம் 18
191 தேர் நிலை
மதக்கரி தனைமுயல்
வயங்கொள்
காதையைப்
புதுக்கவீங்
கிருளொளிப்
பொலிவைப் பற்றியீர்த்
ததிர்ப்பதென்
றுளங்கொளக் கரிய
வாங்குர

கதத்தொகை
பற்றுபொன்
தேர்கணக்கில 19
192 எரிமணிச் சோதியுள்
மூழ்கி யீர்த்துச்செல்
பரிகளைக் காண்கிலர்
பார்த்துச் சூரனூர்
திருவுடை இந்திர
ஞாலத் தேர்கொலென்
றுருகெழச் செல்லுதேர்
உலப்பில் வீதியே 20
193 வீரர் இருக்கை
நால்வகை
நிலையினால் பயிலும்
நாமவில்
வேல்வளை
பலகைவாள் கற்கும்

விஞ்சையர்
கோலவான்
விஞ்சையர் குழாங்கள்
நோக்குபு
சால்பினை வியத்தகு 21
தலைமைப் பாலரே
194 தொழில்செய்வோர்
இருக்கை
கிம்புரி புரசைகள்
கிடுகு கூவிரம்
அம்பொனிற்
கலனைகுப் பாய
மாதிய
வெம்படை ஏனவும்
வேறு வேறுசெய்
பம்பிய வினைஞர்வா 22
ழிடம்பல் லாயிரம்

195 நடைநகம் முதலிய
உலவும் நாமநீர்ப்
புடைநகர் வளமிது
புகன்றுந் திங்களோர்
உடைநக மழைநிகர்
ஒதி யார்பயில்
இடைநகர் வளமினி 23
இயம்ப லுற்றதே
196 இடைநகர்
அறுசீரடி யாசிரிய
விருத்தம்
குடமுலைக்கெதிரென்
றோதுங் குரும்பையை
வெகுண்டு
மின்னார்
பொடியிடி உலக்கை
மீப்போய்ப்

புடைத்தன மீளா
முன்னம்
முடிமிசை அதிரத்
தாக்கிச் சிந்துமுப்
புடைக்காய்த்
தெங்கிங்
கிடரிடர்க் கெதிர்செய்
வோரின்
வியத்தக எங்கும்
ஓங்கும் 24
197 கோல்வளை கறங்கக்
கொங்கை
யசைதரக்
குலையக் கூந்தல்
மேலணி கலக லென்ன
வியர்வெழ
உயிர்ப்பு நீள

வால்வரிப் புனைபந்
தாடு மாதரார்
செயல்காண்
தோறுங்
கால்வரி கழலி
னார்க்குக்
காமம்மீக் கூரும்
மாதோ
198 தமதுரு
நிறத்தைவவ்வுந்
தருக்கறிந்
தொறுப்பார்
போலத்
தமனியந் தகர்த்த
சுண்ணம்
ஒருவர்மேல்
ஒருவர் வீசத்

தமனியச் சுண்ண
மெங்கும்
பரந்தன தவழ்த
லாலே
தமனிய உலகந்
தன்னை
அசிப்பன
தடந்தேர் வீதி 26
199 அசிப்பன - நகைப்பன
எரிமணி சோதி கால
இருள்வர
வறியா மாடத்
தரிவையர் கூந்தல்
ஊட்டும்
அகிற்புகை நாகத்
தெய்திப்
பெரிதிருள் விளைப்ப

நோக்கும்
பெற்றியோர்
தட்டுமாறா
மரீஇயின உலகம்
என்னே யெனமனம்
மருள்வர் அம்மா 27
தட்டு மாறா –
நிலைமாறி, நிலவுலகம்
மேலும்
வானுலகம் கீழுமாக
மாறி
அகழி
மாற்றவள் பூசை
யாற்றி
வரம்பெறு
முறைமை கேளா
ஏற்றமார்

கங்கையாளுங்
கம்பர்பால்
வரத்திற் கெய்திச்
சாற்றருங் கச்சிமூதூர்
வலங்கொளுந்
தகைமைத் தாய
ஆற்றல்சால் அகழி
ஆழம்
அகலமார் அளக்க 28
வல்லார்
201 நெடுபடு பொதும்பர்
சூழ நிரைதிரைக்
கரத்தாற்
செம்பொன்
தடமதில் பொதியப்
புல்லுந் தண்கிடங்
கிறைவர் ஏவக்

கடல்களே வளைய
நோக்கிக்
கம்பரை இறுகப்
புல்லுஞ்
சுடர்மணிக் கங்கை
மானுந் துளித்தநீர் 29
தழும்பு மானும்.
202 திரையெறி தரளம்
பாங்கர்த்
திரண்டுவால்
ஒளிகள் வீசிக்
குரைபுனல் குளிக்கும்
வேழக்
குழாத்தைவெண்
கயமாச் செய்யக்
கரைமிசைக்
காண்போர் என்னே

இம்மை கடவுள்
தன்மை
புரைதபத் தருமித்
தீர்த்தம்
எனவிறும்பூது
கொள்வார்
203 கடம்படு களிநல்
யானை குண்டகழ்
கலக்கிக் கொட்பத்
தடங்கரை யேறற்
கார்த்துத் தாள்தொடர்
பிணித்துப் பாகர்
இடம்பட இருபால்
ஈர்ப்ப இருங்கடல்
அமுதம் உண்ணத்
தொடங்குநாள் சிலம்பு
நட்டுச்

சுராசுரர் கடைதல் 31
மான.
204 நவமணி கொழித்துப்
பொங்கு நளிதிரை
அகழி நாப்பண்
கவளமாக் கடத்த
யானைக் கணஞ்சுலாய்
உழக்குங் காட்சி
உவர்படாப் பௌவம்
ஈதென் றுவந்துவந்
தெழிலி தெண்ணீர்
சுவறவாய் மடுப்பக்
கொட்குந் தோற்றமே
யனைய தம்மா.
32
205 இத்தகை
யகழியென்னு மிதுவு

மோர்கடலே யாக
அத்தினா லிரட்டி
யென்னா தேழென
அறைவர்
மேலோர்
தத்தலைக் கடைக்கால்
வட்டச்
சலதியும் இஃதும்
மன்றச்
சுத்தநீர்க் கடலென்
றெண்ணி ஒருமையின்
தொகுத்தார் 33
போலும்
206 புடைபயில்
பொதும்பர்த் தேனும்
புனல்மலர்த்
தேனும் பாய்ந்து

விடையவர்க்
குமையாள் ஆட்ட
வரும்மது வேலை
யொக்கும்
குடநிகர் செருத்தல்
மேதி கொட்புறச்
சொரிந்த பாலால்
உடைதிரை யகழி
தீம்பால் 34
அளக்கரும் உற்றா
லொக்கும்.
207 பழமுதல்
பொருள்கள்விற்கும்
பாவையர் நாளும்
அந்திப்
பொழுதின்அக் கலன்க
ழீஇய

வண்டலால்
புனற்கி டங்கு
வழிபடும் உமையாள்
எந்தைக்
காட்டுமா
லியங்கள் ஒன்றுங்
கழிவுறா சூழத்
தேங்கிக் கிடந்ததே
கடுக்கும் மன்னோ
208 பாசடைக் கவயம்
போர்த்துப் பகைஞரோ
டிகலித் தானும்
பூசலை விளைப்ப
அன்னோர்
கணைபொரு
புழைகள் தோறும்
தேசுற எழுந்த சோரி

யாமெனச்
செய்ய கஞ்சம்
மூசுவண் டயி னார்ப்ப
மொய்த்துள
தகழித் தெண்ணீர் 36
209 அணிமலர் அழகே
நோக்கி அகழியுள்
இழிகின் றோருந்
திணியுமுட் கொடுமை
நோக்கிச்
சேயிடை விலகு
வோருங்
கணிகையர் கோலம்
நோக்கிக்
காதலித் தகப்பட்
டோரும்
பிணியுமுட் கருத்து

நோக்கி
வெரீஇப்பெயர்ந் 37
தகழ்கின் றோரும்

210 மதில்

எழுசீரடி யாசிரிய விருத்தம்

கம்பை யைத்த டுத்த பின்பு கம்ப
னார ழைத்தலும்
பம்பி யார்த்தொ ருங்கு பௌவ மேழு
முற்று மாறுணர்ந்
தம்பை யண்ட பித்தி காறு மாக்கு
மாத்த டைபொார
வம்ப லர்க்கி டங்கு சூழ்ந்த மல்ல

ளொச்சி 38
யோங்குமே
211 திருக்கி ளர்ச்சி யிற்செ
ருக்கு
தேவ நாடு பாதலத்
தருக்கு நோக்கி
வெஞ்சி னந்த
லைக்கொள்
காஞ்சி யவ்வலி
முருக்க வெண்ணி
முன்பு போய்வ
ளைப்ப வேவி
மூண்டென
மருக்கி டங்கு மிஞ்சி
யும்வி
யத்த கும்வ
ளத்தவே 39

212 கிடங்கி னெல்லை
காண்ப தன்று கீழும்
மேலு மாகநீள்
விடங்கர் தாள ணிந்த
விண்டு நோக்க மேவி
யன்மதில்
தடங்கொள் எல்லை
காண்ப துந்த லைவர்
தஞ்ச டைத்தலை
இடங்கொள் வெண்ட
லைய லாமல் ஏவர்
காண வல்லரே. 40

213 கச்சி வாணர் சென்னி
தாள்கள் காண முன்ப
றந்தகழ்ந்
தச்ச ழிந்த மால்வி
ரிஞ்ச ரன்று சென்ற

வெல்லைகள்
நிச்ச யிப்ப வவ்வளவு
மேக வைத்த நீள்குறி
நொச்சியுங் கிடங்கு
மென்ன நோக்கு
வார்க்கி லங்குமே 41
214 இடித்த கழ்ந்து தம்மி
ருக்கை யெற்றி நீர்க்கி
டங்கினில்
வெடித்தெ ழுந்து தாவு
வாளை மீனை மீண்டு
றாவகை
யடுத்து விக்க வுண்டு
தேக்கி யம்ப ரத்து
மீனையும்
தடுத்து வென்றி
கொள்ள வுள்ள சார்ம

திற்பொ றிக்குலம் 42
215 உடல்ப டைத்தி யக்க
ஒர்நி மித்தன் உண்டெ
னக்கொளத்
திடம்வ லித்த சான்றதா
யவனர் தாட்செ
யப்படுந்
தொடர்பு டைப்பொ
றிக்கு லஞ்சு ழென்றெ
ழும்வி ழும்பகை
மிடல்கெடத் தெழிக்கு
மோடு மீளு மின்ன
நீரவே
216 இம்மதிற் பொறிக்
குலமெ திர்ந்து ளோர்த
மைச்செகுத்
திம்மெ னும்முன்

வென்றி கொள்ளு மீது
ணர்ந்து தெவ்விர்கா
ளம்ம வீண்டு றேன்மி
னென்று கையெ டுத்த
சைப்பபோல்
அம்ம தில்த லைத்து
கிற்கொ டிநு டங்கு 44
மாலரோ
217 கலிவிருத்தம்
வளமகன் திருநகர்க்
கிழத்தி மாமைசால்
இளமுலை
திளைப்பக்கார் எழினி
சேர்த்துபு
தளர்வற நாட்டிய தம்ப
மேயெனக்
கிளர்மதி

லிடந்தொறுஞ் 45
செறியுங் கேதனம்
218 நேமிமால் வரைமிசைக்
கிளைத்து நீண்டவே
யாமெனக் கொடிமிடை
அம்பொன் மாமதில்
மீமிசைக் கோபுர
மேலுஞ் சேறலால்
யாமினிப் புகல்வதற்
குவமை இல்லையே 46

219 அறுசீரடி யாசிரிய
விருத்தம்
மகதநா டென்னக்
காஞ்சி வைப்பினுங்
கடைஞர் எய்தி
இகலற வளர்க்கும்
எண்ணான் கறத்தினுக்

கிடர்செய் யாமைத்
தகையணங்
குமையாள் வைத்த
தடைநிகர் மதில்சீர்
முற்றும்
புகரற இயம்பப்
புக்கால் புலவர்க்கும்
உலப்பு றாதே. 47
220 மிடைபுறத் தூர்க
ளெல்லாம் விண்ணவர்
நகரா வங்கண்
புடைநகர் அயனூ
ராகப் பூமகள்
கொழுநன் றன்னூர்
இடைநக ராக மற்றை
ஈசனார் உலக மேயா
நடைபிற ழாத கீர்த்தி

படைத்தவுள் நகரஞ் 48
சொல்வாம்.
221 அகநகர் . பரத்தையர்
வீதி
அளிமதன் நூலி
னாற்றால் ஆடவர்
தம்மோ டாடிக்
களிமனைக் குள்ளால்
தாங்கள் விளைத்திடுங்
கலவி யெல்லாந்
தெளிதர மாடந்
தோறுஞ் சித்திரந்
தன்னிற் காட்டி
இளையரை மயக்கிக்
காமம் ஏற்றுவோர் சேரி
மல்கும் 49
222 வரியளி முரலா வாடா

மாலைய இமையா
நோக்க
தரைமிசைத் தோயாத்
தால சித்திரந் தயங்கு
காட்சி
வரையிலா மகளிர்
இன்னோர் மாண்நலம்
வேட்டு வானில்
கார்களும் எய்திச்
செவ்வி பார்த்துறை
தோற்றம் ஒக்கும்
223 பூத்தபின் இராறு
நாளுங் கிழத்தியர்ப்
புணர்ந்து தம்மை
நீத்தன ரெனுஞ்சீற்
றத்தா னின்ற
வீரொன்பா னாளும்

ஏத்துமா டவரைத்
தங்களிள முலைத்து
ருக்க மேற்றிப்
பாத்திரு நிதிய
மெல்லாம் பறித்தனர் 51
கொள்ளை கொள்வார்
224 கோலத்தின் இசையின்
யாணர்க் கூத்தினின்
அவிநய யத்திற்
சீலத்தின் கலவிச்
செய்கைத் திறத்தினின்
பிறவாற் றானும்
ஞாலத்து மைந்தர்
தம்மை மருட்டிநற்
பொருள்கள் வவ்வி
காலுற்ற சாற்றுவேழக்
கோதுபோல் கழிய

நீப்பார் 52
225 அலகில்நல் லறஞ்சூழ்
காஞ்சி அமர்பெருஞ்
செல்வராயுங்
குலமுறைச் சார்பால்
வெந்நோய்க்
கோட்பட்டார் இழிஞ
ரேனுஞ்
சிலகொடுப் பனவுங்
கொண்டு
சேர்ந்துபொய் வஞ்ச
மெல்லாம்
நிலைபெற அடைத்து
வைத்த நெஞ்சின ராகி
வாழ்வார். 53
226 அலைவிழிக் கணிகை
நல்லார் ஆடவர்

தமக்கு நல்கும்
இலைநிக ரெனுமின்
பத்திற் கின்பமும்
சமமாக் கொண்டு
விலையென நிதியுங்
கோடல் வியப்பிற்றே
ஏற்ற மாக
மலைநிகர் தனங்கள்
ஈந்தோர் மலைநிகர்
தனமுங் கொள்வார் 54
227 தவமறைக் கிழவன்
மாயன் தாணுவென்
றிவரும் இவ்வூர்க்
கவர்மனப் பரத்தை
மாதர் கண்வலைப்
பட்டே இன்றும்
இவறிய அலரோன்

மாலோன் பித்தனென்
றிப்பேர் பெற்றார்
சிவசிவ யாவ ரேயோ
அவர்திறத் தகப்ப 55
டாதார்
228 விற்றிடும் அல்குல்
தன்னை மீளவுந் தமதே
யாக்கி
மற்றைய நாளும்
விற்கும் வரைவிலார்
வீதி இச்சீர்
கற்றிலா வணிக
மாக்கள் ஆவணக்
கவினை நோக்கிப்
பற்றுவெண் டரளக்
கோவைப் பத்தியால்
சிரிக்கும் மன்னோ 56

229 இருமைவா ணிபத்தில்
கூர்த்த மதியரும்
இறும்பூ தெய்த
அருவமாம் இன்பந்
தன்னை இம்மியின்
அளவும் ஏறா
துருவமாம் பொருளுக்
கேற்ப நிறுத்துவிற்
றொழுக வல்ல
இருமனப் பெண்டிர்
தம்முள் தருக்கிவாழ்
இருக்கை ஈதால்
230 கடைவீதி
இன்னவீங் குளவோ
என்னக் கடாதலும்
இயம்பி யோர்கட்
கன்னவிங் குள்ள

இல்லென் றிறுத்தலும்
அறியா தியாரும்
என்னவுந் தருதி
ரென்ன விலைகொடுத்
தேற்ப ஈய
மன்னியெப்
பொருளும் என்றும்
நிறையுமா வணம
னந்தம் 58
231 செய்வினை
யனைத்தும் தன்பால்
சேர்த்துவைத்
துயிர்க்குப் பின்னர்
அவ்விறை யானை
யாற்றால் அளித்திடு
மாயை யேபோல்
கொய்வளம் வருவ

முற்றுங் கொண்டுபின்
நாய்கர் மாறப்
பௌவநீர் உலகுக்
கெல்லாம் உதவுவ 59
பைம்பொன் மாடம்
232 அணங்கனார் பரப்பி
விற்கும் அணிகிளர்
கோங்கந் தாரிற்
கணங்கினைக்
கணியென் றஞ்சிச்
சுரும்பினம் உறாமை
நோக்கிப்
பணங்கிளர் பாந்தள்
அல்குற் பாவைமீர்
என்னே பொற்பூ
மணங்கமழ் கின்ற
தென்பார் ஆடவர்

மருட்சி எய்தி 60
233 வீழ்பொருள் எடுக்க
லாற்றா உறுசனம்
மிடைந்த வீதித்
தாழ்குழல் மடவார்
மைந்தர் தங்களுள்
முட்டுங் காலைக்
காழ்மணி முலையுந்
தோளும் கலந்துற
உவகை பொங்கி
வாழ்நருஞ் சிலரே
பல்லோர் வாடிநைந்
தழுங்கு வார்கள் 61
234 கலித்துறை
நெருங்கு பல்சனம்
முழக்கறாக் கூலம்நீல
விடத்தைக்

கரந்த கம்பர்மேல்
தெழித்துறுங்
கடல்பெருந் தெருவால்
சுரந்து வந்துநாற்
புறத்தினுஞ் சனமிகத்
தொகுவ
பரந்த வீரையுள்
புகுந்திடும் பற்பல 62
நதியே
மற்றையவீதி
அறத்தின் நீள்நகர்
புவனசக் கரமென
ஆன்ற
திறத்த பொன்மதில்
ஏழுடைச் சின்மயக்
கோயில்
புறத்த வான்மிசைப்

புலவர்கண் ணுறுபட்
டிடாமை
மறைத்தெ னக்குயின்
உரிஞ்சுபூம் பந்தர்சால் 63
மறுகு
236 மகரப் பொற்குழைப்
பிரான்தளி சூழ்மதில்
குறடும்
நகரச் சீரெயில்
சுற்றும்மா ளிகைநிரை
யாருந்
திகழச் சூழ்தெரு
ஆரிடை
வெளியுமாய்ச்
சிவந்தேர்ச்
சகடத் தேருடைச்
சகடமற் றொன்றெனத்

தயங்கும் 64
237 சரிக்குங் குஞ்சர
மதப்பெருங் கலுழியுந்
தளவைச்
சிரிக்கும் மூரலார்
கலைந்ததார் நறவமுஞ்
சேறாய்
விரிக்கும் வீதியில்
அடிவழுக் காவகை
வெயிலைப்
புரிக்குஞ் செம்மணி
பதித்துமேல் நடப்பராற்
புரியோர் 65
238 ஞெள்ளற் பாங்கரின்
நறியநீர் வண்டலாட்
டயரும்
அள்ளற் சேறுகள்

புலர்த்துவான்
இடையிடை யகழ்ந்து
பள்ளத் தாய்சிறு
கால்பல வகுத்தெனப்
பிறங்கும்
வள்ளற் காவலர்
செலுத்துதேர்ச் 66
சகடுபோம் வழியே
239 செய்ய திண்புயத்
தெழிலினைக்
கவர்ந்தமை தெரிந்து
வெய்ய மாந்தர்கள்
வெதும்புறப் பன்முறை
தாக்க
ஐய வோவென
அலறுவ போலணி
முழவம்

மைய வேலையுஞ்
சமழ்ப்புற
வயின்தொறுங்
கறங்கும் 67

விலாழி நீருமொண்
சந்தன விரைச்செழுஞ்
சேறுங்
குலாய வீதிகால்
வழுக்குமென் றஞ்சுபு
கோணல்
நிலாமு டித்தவர்
திருவிழாத் தொழவந்து
நெருங்கும்
வலாரி யாதியோர்
அடிபடி உறாவகை
நடப்பார் 68

241 புரசைத் திண்களி
றுலாத்தரும்
பொலஞ்சுடர் மறுகிற்
பரசப் போதரும்
மன்னவர் பணிமுடி
நெருக்கின்
அரசப் பன்மணி
தெறித்துவீழ்ந்
திமைப்பன அவியா
முரசப் பேரொலி
அதிர்ப்பினில் உக்கழு 69
துடுப்போல்

242 அங்கண் வீதியின்
அணிநலங் காணுமா
தரத்தின்
எங்கள் நாதனுந்
திருவிழா என்பதோர்

பெயரான்
மங்கை யாளொடும்
மகாரொரொடும் வானவர்
பழிச்சத்
திங்கள் தோறெழுந்
தருளுமேல் 70
அதன்வளஞ் சிறிதோ
243 பாலி யேமுதல்
பலநதித்
திவலையாய்ந் தழகின்
பால வாயமா
ளிகையடித்
தலத்தினைப் பாராப்
பால வெண்சுதை
மாடமேற் சிகரமும்
பனிவிண்
பாலி யாற்றுநீர்த்

திவலைகள் 71
போர்ப்பவான் படரும்
244 பன்னி றப்பரி கருங்கரி
தொழிலமை ப·றேர்
இன்ன கீழ்நிலை
வாயிலின் இயங்குதல்
நோக்கி
மன்னு மேனிலை
வாயில்வெண் கரிபசு
மான்தேர்
அன்ன வேனவுந்
தன்னிடத் தியங்கவான்
அணவும் 72

245 அலங்கு கீழ்நிலை
மாடமங் கடுப்பினின்
மாட்டும்
இலங்க கிற்புகை

யான்விரை யேற்றுவர்
மடவார்
புலங்கொள் மேனிலை
மாடமும் புரிகுழற்
கூட்டுந்
துலங்க கிற்புகை
யான்மணங் கஞலுறத்
தொகுப்பார் 73

246 இருசு டர்ப்பெருஞ்
சிலைகளின்
இயன்றமா ளிகைகள்
உருகு வெங்கதிர்
தடவரச் சுடுகனல்
உமிழும்
அருகு தண்கதிர்
தடவரக் குளிர்புனல்
அளிக்கும்

மருவி னோர்குணம்
பிடிபடல் வையகத் 74
தியல்பே

247 நெறித்த கூந்தலார்
மேனிலைச் சாளரக்
கதவு
திறத்த லுந்தடை
படுமகிற் புகையெலாந்
திரண்டு
புறத்தின் ஏகுவ
வழுதிதன்
சிறைப்படும் புயல்கள்
மறித்து விட்டநாள்
விரைந்துவிண்
சேறலை மானும்
75

248 தெரித்த பன்மணி

மாடமேல்
திகழ்ந்தபொற் குடத்து
விரித்த தண்கதிர்க்
கடவுள்நின்
றசைதல்வேட் கோவர்
திரித்து விட்டசக்
கரமென லாகுமத்
திகிரி
பரித்த பச்சைமண்
ணென்னலாம் 76
அதற்பயில் களங்கம்
249 நிரவு நித்திலத்
தோரணச் செழுங்கதிர்
நிரைகள்
விரவி விண்ணெலாம்
வெள்ளொளி
விரித்தலான் அன்றே

பரவை மேலெழும்
போதும்வீழ்
பருவத்தும் அல்லால்
இரவி மண்டிலச்
சேயொளி விளங்கிடா
இயல்பே. 77

திங்கள் செங்கதி
ராளனென் றுரைப்பதே
தேற்றம்
அங்கண் நித்திலத்
தோரணத் தொளியீல்
அரிபோல்
தங்கி வெண்கதி
ராயினன் அதற்குறுஞ்
சான்று
துவங்க மாலையுங்
காலையுஞ் 78

சிவந்துதோன் றுவதே.
251 அணங்க னார்நகைத்
திடுந்தொறும்
ஆங்கவர் வளர்த்த
கணங்கொள்
முல்லைகள்
முகைப்பன
அவர்நகைக் கவினை
இணங்கி நாம்கவர்ந்
தொளித்தமை
அறிந்தனர் என்றே
வணங்கி நாணினால்
உடன்சிரித் திடுவது
மானும். 79
252 ஆட கத்தியல்
மேனிலை மிசையணங்
கனையார்

மாட கத்தனி
யாழிசைக் குவந்துறும்
வான
நாட கத்துவெண்
களிற்றினை
நளினமென் மலர்ப்பூம்
பாட கத்தடி
நடையினாற் பருவர
லுறுப்பார் 80
253 பளிக்கு மேனிலத்
தந்நலார் பணைமுலை
ஞெமுங்கக்
களிக்கும் ஆடவர்
தமைத்தழீஇக்
காமப்போர்க் கலவி
விளைக்கும்
ஆற்றலைக் குரவனில்

விழைந்தவன் ஒருசார்
ஒளித்தி ருந்துகாண்
போனெனச்
சுருங்கையுள்
நுழையும். 81
254 மேனி லத்தர
மியத்திடைத்
துயிலுமெல் லியலார்
ஆன னத்தெழில்
கவர்ந்துசெல்
மதியினை யவர்தங்
கான லர்க்குழற் காரளி
பின்தொடர்ந் துதைப்ப
ஈன முற்றவத்
தழும்புவான்
கறையென யிலங்கும்
82

255 உங்கண் மாதரார்
முகத்தெழில்
நோக்கியோர் வடிவம்
கங்கள் நான்குளான்
படைத்ததில்
அவயவங் காண்பான்
அங்கண் முன்னுற
வகுப்புழி அஞ்சனங்
குலையப்
பங்க முற்றதென்
றொழித்ததை
மதியெனப் பகர்வார். 83

256 இவ்வ ரைப்பினில்
இரவியும் மதியமும்
வழியே
செவ்வன் ஏகுறா
தொதுங்குவ

இவர்முகச் சீர்க்கும்
பவ்வ நேரகல்
அல்குற்கும்
வடிவொடு
பணைத்தேர்
ஒவ்வு றாமைகண்
டுட்கொளும் உட்கினா
லன்றே 84
257 தங்கள் வாண்முகம்
மதியெனச் சார்தரும்
பணிக்குத்
துங்க மாடமேல்
மின்னனார் வேற்றுமை
தோற்றத்
திங்கள் மாட்டறி
குறியொன்று
செய்துவைத் தனரால்

அங்கண் மாநிலங்
களமென் றிடப்படும்
அதுவே. 85

258 மறைந்தி டாமறுப்
பயில்மதி முகத்தெழில்
பெறாது
குறைந்து பார்க்குமங்
கரிவைமார் கோணுதல்
கடுப்ப
நிறைந்து
பார்க்கும்மீண்
டவர்முக நிகர்ப்பமற்
றிவ்வா
றறைந்த திங்கள்தோ
றலமரும் அக்கரைப்
பசுப்போல். 86

259 கதிர்செய் மாடமேல்

புலவிதீர் கலவியின்
முடிவின்
வெதிர்செய் தோளியர்
கொண்கர்தம்
மருமமேல் வதனம்
பதிய வைத்தனர்
துயிலுவர்
அற்றம்பார்த் திருந்து
புதுமு கத்தெழில்
உடுபதி வெளவுறாப்
பொருட்டே 87

தேங்கும் ஊடலின்
மாதரார் பறித்தெறி
செங்கேழ்
ஒங்கு பன்மணி
அவரடி வருந்திநைந்
துளைய

ஆங்கு நாடோறும்
பைதுறுத் தவிர்வன
கொடிதாத்
தாங்கள் செய்வினை
தங்களுக் கேபகை 88
யாமே.

261 விருந்து நாடோறும்
இடையறா தெதிருமே
தகவால்
அருந்தி றற்சிறு
புதல்வர்சூழ்ந்
தணுகிடுந் திறத்தான்
முருந்து மூரலார்க்
காயிடைக்
கொழுநர்பால் மூண்ட
மருந்தில் ஊடலுஞ்
சிறுவரை யன்றிமே

வாதால். 89

262 மேனி லத்துவந்
துலாவிடுங்
கடவுண்மெல் லியலார்
தாழ்நி லத்துறுங்
கூவல்கள் நோக்கிநந்
தமைப்போல்
கீழ்நி லத்தவர்
தாமுமிங் கெய்தினர்
கெழீஇப்போம்
ஊழ்நி லைத்தபல்
பிலங்கொலாம்
உவையென வியப்பார்
90

263 கலிவிருத்தம்
கால மன்றிக் கனிவுற
மாதளைக்

கேல வான்புகை
யேற்றுதல்
போன்மினார்
சால வெம்முலைச்
சாந்தம் புலர்த்திடு
நீல தூமம் நிமிர்ந்தெழு 91
மெங்கணும்
264 கொன்னும் வார்குழற்
கூட்டுங் குரூஉப்புகை
அந்ந லாரைப்
பொதிவ தவர்தமைத்
தன்னின் னீங்கின
மின்னெனத் தண்முகில்
உன்னி வந்து
வளைந்திடல் ஒக்குமே 92
265 வார்கொள் கொங்கை
மலர்க்கணை ஏறிடும்

ஏர்கொள் தொய்யிற்
கருப்புவில் ஏந்துவார்
தார்ம லர்க்குழல்
நாரியர் தாங்கள்தாம்
வீர வேள்படை
என்றறி விப்பபோல் 93
266 நாறு தோட்டு நளினம்
இரண்டினில்
மாறி மாறிவீழ்
வண்டின மாமெனக்
கூறு மாதர் குழீஇயிருந்
தாடுசீர்
ஏறும் அம்மனைப்
பாட்டிசை எங்கணும் 94
267 தங்கள் பண்மொழிக்
கொக்குந் தகைமையை
அங்கண் ஆய்பவர்

ஏய்ப்ப அணிமலர்ச்
செங்கை மெல்விரல்
சேர்த்தித் திவவியாழ்
எங்கும் மங்கையர்
பாடுவர் எண்ணிலார் 95

268 வேறு

கொங்கையின்
எதிருறக் கூசி
னாலெனப்
பொங்கொளித்
தரளம்பின்
னொலிப்பப்
பூவைமார்
மங்கலச் சதிநெறி
வழாமல் ஆடரங்
கெங்கணும் நூபுரத்
திரையி ஈட்டமே 96

269 மைந்தர்பந் தெறிதலும்
மாடப் பித்திகை
சிந்துவ பன்மணி
செழியன் செண்டெடுத்
துந்தியன் றோச்சலும்
உலப்பி லாநிதி
தந்திடும் வடதிசைச்
சாரற் குன்றுபோல் 97

270 மணிப்பொலம்
பூண்சிறார் விடுக்கும்
வான்படந்
தணித்தொறும்
விடுந்தொறுந் தணிந்து
நீள்வன
கணிப்பரு நந்திநெட்
டுயிர்ப்பின்
காற்றிடைப்

பணிப்பகை
முன்னுழல் பரிசு
காட்டுமே 98
271 மாடமேல் சிறுமகார்
விடுக்கும் வண்படம்
பாடல்சால் இருசுடர்
தம்மைப் பற்றுவான்
நாடின திரிதரு நாக
மென்னவும்
ஆடுவ விசும்பிடை
அமரர் நோக்கவே 99
272 அட்டிலில் குய்ப்புகை
அணங்க னார்குழற்
கிட்டிடும் அகிற்புகை
மகத்தெ ழும்புகை
முட்டிமேல்
பரந்தெங்கும்

மொய்த்த தோர்கிலார்
வட்டவான்
செழும்புகை வண்ண
மென்பரே 100
273 வேள்விச்சாலை
இந்திர னூர்தியிங்
கெய்தித் தன்முடிச்
சுந்தரஞ் சிதைதரத்
துதையச் சீறித்தன்
மந்திரப் புகையினால்
வலாரி ஊரெழில்
சிந்திடச் செய்வசீர்
வேள்விச் சாலையே 101
274 எழுசீரடை யாசிரிய
விருத்தம்
ஆகுதித் தழலின்
அறுதொழி லாளர்

அருமறை
மனுவெடுத்தோதி
ஓகையிற் சொரிநெய்
தெறித்தெழும்
பிதிர்வும் ஒலிபடு
புலிங்கமுங் கொண்டு
மேகமாய்ப் படர்ந்த
தூமமே யிடித்து
மின்னிநீர்
பொழிவன போலும்
ஈகைசால் வேள்வி
மறுத்துழி
மாரியின்மையே
யிதற்குறு சான்றால் 102
அந்தணர் இருக்கை
பூசுரப் பெயரின்
இருமொழிப்

பொருட்கும்
உரிமைபூண்
டுறுநிலைக் கேற்பக்
காசினி வரைப்பின்
நாடோறும் வழாது
கமழ்சுவை
யடிசிலான் அதிதி
பூசையும் வேள்வி
யவியினாற் கடவுள்
பூசையும்
ஒருங்குசெய் கடப்பா
டாசற வாற்றும்
பார்ப்பன வாகை
யறிஞர்வா
ழிடம்பல அவண. 103

276 அரசரிருக்கை
தகைபெறு வலியால்

தெம்முனை
முருக்கிக் காவற்சா
காடுதைத் தெங்குந்
திகிரியொன் றுருட்டி
முறையுளி செங்கோல்
செலுத்துநர்
கள்வர்மற் றுயிர்கள்
பகைவர்தாம் தமரென்
றிவ்வயின் எய்தும்
பயந்தடுத்
துலகெலாம் புரக்கும்
மிகுபுகழ் படைத்த
வரசியல் வாழ்க்கை
வீரர்வா ழிடம்பல
அவண 104
277 வணிகரிருக்கை
மேதகு விரிஞ்சன்

அரும்பெறல் குறுங்கை
விழைதகை
யாயெனப்
படைத்தோர்
ஏதிலர் பொருளும்
தம்மபோல் பேணி
வாணிப மீட்டுநர்
வடாது
மாதிரத் தலைவன்
புறங்கொடுத் திரியும்
வளத்தினார்
மறைநெறி யொழுக்கம்
ஆதரித் துயர்ந்த
விழுக்குடி வணிகர்
அமர்ந்துவாழ்
இடம்பல அவண 105
278 வேளாளரிருக்கை

முருகுயிர்த் தலர்ந்த
மலரவன் றனாது
    முகமுத
லுறுப்பெலாந் தாங்கிச்
சரணமென் றுரைக்கும்
உறுப்பினில் தோன்றிச்
    சாற்றுமம் முகமுத
லுறுப்பின்
வருமொரு மூவர்
தங்களை உழவின்
    வண்மையான்
நிலைபெறத் தாங்கும்
உரியவே ளாண்மை
பூண்டபேர்
    தமக்கே யுடையவ
ரிடம்பல அவண 106
279 மற்றையோர் இருக்கை

நால்வகை வருணத்
துயர்குடிப் பிறந்த
நல்லவ
ரிருக்கையைச் சூழ்வ
சால்புறும் அவரி
லுயர்ந்தவ ரிழிந்தோர்
தங்களுள் குழீஇ
மணந்தளித்த
பால்படு மேனைச்
சாதிபே தத்தோர்
பலர்களுந் தத்தம
நெறியின்
சீலராய்த் துவன்றி
மரபுளி யொழுகுந்
திருமலி
பல்வகைக் குடியே 107
கழகம்

வளரிலைத் தருப்பை
நுனியெனக் கூர்ந்த
மதியினர் தொன்று
தொட்டுடைய
பளகறு கேள்விப்
பயிற்சியர் மேற்கோள்
முதற்பகர்
மூன்றினும் தெருட்டி
இளையருக் குணர்த்து
மிலக்கண நெறியோர்
ஈரிரு புலமையர்
தம்முள்
களவிக லிகந்து
குழாங்குழா மாகிக்
கலைதெரி 108
கழகமும் பலவால்
281 சைவமடம்

காமனை முனிந்து
நெடுஞ்சடை தரித்துக்
கவின்றகல்
லாடைமேற் புனைந்தி
யாமெலாம் வழுத்தும்
துறவியென் றிருந்து
மொருத்திதன்
இளமுலைச் சுவடு
தோமுறக் கொண்டா
ரெனச்சிறை
யிடல்போல்
சுடர்மனக் குகையு
ளேகம்பத்
தோமொழிப்
பொருளை யடக்கியா
னந்தம்
உறுநர்வா

ழிடம்பல உளவால்
282 திருக்கோயில்
இருள்மலந் துமிக்குஞ்
சிவாகம
முறையி னீரிரு
பாதமு மனுட்டித்
தருள்பெறு மாதி
சைவர்க ளாதி
அவாந்தர சைவ
ரீறானோர்
மருவிவாழ் மாட
மாளிகைப் பத்தி
மருங்குடுத்
துயர்வனப் பினதால்
தெருள்தரும் அனாதி
சைவர்வீற் றிருக்கும்
திவளொளிப்

புரிசை யேகம்பம் 110

283 திருமதில்

விண்ணழி வுறநிமிர்

வீற டக்குவான்

அண்ணலா

ணையினிமி லூர்தி

யாண்டுறீஇ

எண்ணில

வுருவுகொண் டிருத்து

நீரதே

பண்ணமை

மதின்மிசை யிடபப்

பந்தியே

111

284 திருக்கோபுரம்

ஒன்பது கோள்களும்

உலாவி வைகுவான்

ஒன்பது மாடமங்

கூழிற் செய்தென
ஒன்பது மணிகளி
னியன்று ஒண்மைசால்
ஒன்பது நிலைதழீஇ
யோங்கும் கோபுரம் 112
285 கார்முகில்
உடுக்கையாக் கதிரின்
வானவன்
மார்பணி மணியதா
வட்ட மாமதி
சீர்நுதற் பூதியாச்
செல்வக் கோபுரம்
பார்புகழ் புருடனி
லோங்கும்
பான்மைத்தே 113
286 நச்சியே கம்பரைத்
தொழுது நாள்தொறுங்

கச்சியில் வாழ்பவர்
இறுதிக் காலையில்
அச்சிவ லோகத்தை
அணுக வைத்ததோர்
பொச்சமில் லேணியும்
போலுங் கோபுரம். 114

287 பரிதியின் நிழல்செயக்
கதிர்க்கும் பன்மணித்
திருவியல் கோபுரச்
செல்வ வாய்தலின்
முரசுகா லந்தோறும்
முழங்குஞ்
செவ்வியென்
றறுகுற அமரரை
அழைத்தல் மானவே. 115

288 கொடி
மடுத்தவைம் பாசமா

வரண மைந்தனால்
தடுத்தருள் கோயிலில்
தம்பி ராளெதிர்
எடுத்தபூங் கொடிமிசை
யிடபம் வான்மிசை
அடுத்ததோர்
இடபத்தோ டளவ
ளாவுமே 116
289 தூபி
தங்குலத் திறைவி
செய்பூசைச் சால்பினை
அங்கணன்
மகிழ்வொடுங் காணு
மாசையின்
எங்குள வரைகளும்
ஈண்டி னாலெனப்
பொங்கெழில்

சிகரங்கள் பொலிந்து 117
தோன்றுமால்
290 மண்டபம்
கன்மநோய் குடைபவர்
கடப்பச் செய்திடும்
பன்மலர் துவன்றிய
தீர்த்தப் பாங்கரில்
பொன்மலர் மண்டபம்
பொலிந்து தோன்றுவ
தென்மணிப்
பேழையைத் திறந்த
மூடிபோல். 118
291 வேள்விச்சாலை
அறுசீரடி யாசிரிய
விருத்தம்
சேந்த பொற்குண்டத்
தோங்குஞ் சிகைத்தழல்

மிசையே கம்ப
வேந்தையா வாகித்
தேத்தும் புகைபொதி
வேள்விச் சாலை
ஏய்ந்தசீர்த் தகரவித்தை
முறைப்படி இதயக்
கஞ்சப்
பூந்தழற் சிகைமே லீசற்
போற்றுமா யவனை
யொக்கும். 119

292 மாமுலத்தொருவர்
கோழரை காம்பாச்
சாகை வட்டமேற்
குடையாப் பொற்பின்
வாழிய வொருமா மீது
வளநிழல் கவிப்ப
வாங்கண்

ஊழ்முறை யுயிர்கட்
கெல்லாம் ஐந்தொழி
லோம்பி யெம்மான்
ஆழ்புன லுலக மேத்த
வரசு வீற்றி ருக்கு
மன்னோ

293 பற்பல தேய மெல்லாம்
பாங்குடைத்
தொண்டை நாடு
பற்பல சங்க நாப்பட்
படர்வலம் புரியா
மங்கட்
பற்பல நகர மெல்லாம்
வட்டமாப் படைத்த
காஞ்சி
பற்பல வலம்புரிக்
சலஞ்சலப்பணில

மாமால் 121

294 அத்திருக் காஞ்சி
வைப்பி னலகிலாத்
தலங்க டம்முட்
பத்திசேர் மாடக் கம்பம்
பாஞ்சசன் னியமா
மந்த
வுத்தமச் சுரிமு
கத்துள்விலைவரம்
புணராச் சாதி
முத்தமே ஒருமா மூலத்
திருந்தருள் முக்கண்
மூர்த்தி 122

295 பன்மணி வெயில்கள்
கான்று படரிருள் சீப்ப
வட்டப்
பொன்மதில் சூழ்ந்து

நாப்பண் சதாசிவப்
புத்தேள் வைகும்
தன்மையால் கச்சி
மூதூர் தரைமிசை
உயிர்கள் செய்த
கன்மமோர்ந்
தளிப்பான் வந்த
கதிர்செய்மண் டிலமே
யாமால் 123
296 விலக்கிலா வறநூல்
சொன்ன முனிவரும்
விதிவி லக்காம்
இலக்கிய மிதன்பால்
கண்டே யிலக்கணம்
விதித்தார் போலும்
அலக்கண்நீத் தமெண்
ணான்கும் அம்மையே

வளர்க்கு நீரால்
கலக்கமில் அறங்கட்
கெல்லாம் ஆகரங்
காஞ்சி யன்றோ 124
297 உவரிசூழ்
உலக்வைப்பின்
உரையமை கேல்வி
சான்ற
கவிகளென்
றுரைப்போர் தம்முள்
காஞ்சியைப் புகழா
ரில்லை
அவரெலாம் புகழ்ந்தும்
இன்னு முலப்புறா
அதன்சீர் முற்றும்
சிவநிறை கல்விசாலாச்
சிறியனோ கிளக்க

வல்லேன் 125

298 இத்திருக் காஞ்சி
வைப்பில் பலதளி
யிடத்தும் மேவி
அத்தகு கம்ப வாணர்
அவரவர்க் கருளிச்
செய்த
உத்தமக் காதை
யெல்லாஞ் சூதனன்
றுரைத்த வாறே
முத்தமிழ் அறிஞர்
தேற மொழிபெயர்த்
துரைப்பேன்
உய்ந்தேன்
126

ஆகத் திருவிருத்தம் 298

-------

---

## 3. பதிகம் (298-329)

299 எழுசீரடியாசிரிய
விருத்தம்
சிவபரஞ் சுடரைக்
கண்டகு மேதுச்
செய்தவர்
வினாவிய வாறும்
தவலருஞ் சிறப்பின்
நந்தியெம் பெருமான்
சனற்குமா
ரனுக்குவெஞ் சாப
நவையறுத் தருளிச்
செவியறி வுறுத்த
நலமெலாஞ் சூதமா

முனிவன்
அவர்தமக் கியம்பிப்
பிஞ்ஞகன் உமையாட்
கருளிய
உண்மைசெப் பியதும் 1
கன்னியாழ்க் கிழவன்
வரம்பெறு
காரைக் காட்டினிற்
பூசனை யுஞற்றி
மின்னவிர் மணிப்பூண்
சிவியெனும்
மகவான் வீடுபே
றெய்திய வாறும்
பொன்னுடைப் புத்தேள்
புண்ணிய
கோடிப் புனிதனை
யருச்சனை யாற்றி

அன்னவே றுகைக்கும்
அண்ணலோ
டுலகை யுண்டுமீட்
டுதவிய வாறும் 2
301 அத்தகு மாயோன்
வலம்புரிக் களிற்றை
யடியினை
வணங்குபு தனாது
கைத்தலத் திழந்த
தெம்மருள்
சிலைப்பிற்
கதிர்வளை தனைப்பெறு
மாறும்
மெய்த்தபே ரன்பின்
மலர்மிசைக்
கடவுள்
வேள்விசெய்

துயர்சிவாத் தானத்
துத்தம னருளான்
மாயனோ டுலகை
யுண்டுமீட் டுதவிய 3
வாறும்
302 கருகிருள் விடத்தை
யிறையவன்
பருகக் காட்டிய
அறக்கடை தணப்ப
இருமறை விதியாற்
கடவுளர் மணிகண்
டேசனை யேத்திய
வாறும்
மருளுரு செருக்கிற்
பொய்யுரை கிளந்த
வல்வினை கழிதர
வியாதன்

பொருவருஞ் சார்ந்தா
சயப்பெரு வரைப்பிற்
பூசனை இயற்றிய 4
வாறும்
303 வீட்டினை விழைந்தேழ்
முனிவரும் பூசை
வேறுவே றியற்றிய
வாறும்
கோட்டமில் கொள்கைப்
பராசர முனிவன்
தொழுதுதன்
தாதையர்க் கொன்று
மாட்டிய வரக்கன்
குலத்தொடு மடியச்
சென்றதும்
விளக்கொளி மாயோன்
நாட்டமுன் றுடைய

நாதனைப் பரவி
நதிதடுத் தோம்பிய
வாறும்
304 ஈண்டிய புகழ்முத்
தீச்சரம் பரசி
ஈன்றவள்
சிறையினை விடுவித்
தாண்டகைக் கலுழன்
நஞ்சுபில்
கெயிற்ரறுப்
பணிகளை
அலைத்தெழு மாறும்
நீண்டவன் உணராத்
திருவடி போற்றி
நெளியுடற்
பணிகளும் எம்மான்
பூண்டுகொண் டருளப்

பெற்றமே தகவாற்
புள்ளினை
வினாவிய வாறும் 6
இறுதிநா ளிருவர்
காயமேல் தாங்கி
வியாழமும்
இயமனும் வழுத்த
மறுவறு காயா ரோகண
வரைப்பின்
எம்பிரான் மன்னிய
வாறும்
அறுகணி வேணி
மஞ்சள்நீர்க்
கூத்தர் அடியிணை
அருச்சனை செய்து
தெறுபுலன் அவித்த
சித்தரெண் ணரிய

சித்திபெற் றுய்ந்திடு
மாறும் 7

306 மாதவன் பரசிப்
பிருகுவன் சாப
வன்பயந் தபப்பெறு
மாறும்
மேதகும் ஒருசார்
முனிவரர்
மதங்கன் வெண்கரி
போற்றிய வாறும்
ஏதமில் வெள்ளி
மொழிப்படித் ததீசி
இட்டசித் தீசனைத்
தொழுது
கோதறு வயிர
யாக்கைபெற் றோங்கிக்
குபன்றனைப்

புறங்கண்ட வாறும் 8

307 அந்தணன் கச்ச பாலயத்
திறைஞ்சிப்
படைத்திடும்
ஆற்றல்பெற் றதுவும்
பைந்துழாய்க் கூர்மம்
ஆயிடைப் பரசிப்
பாதகந்
தவிர்ந்துய்ந்த வாறும்
மைந்துறு மாண்டு
கன்னிமா முனிவன்
வழுத்திவான்
அரம்பைய ரைவர்
சந்தனந் திளைக்கும்
இளமுலைப்
போதகந் தரைமிசை
நுகர்ந்துவாழ்ந் ததுவும் 9

308 அங்கியங் கடவுள்
ஏத்திவிண் புலத்தார்
அவிப்பொறை
மதுகைபெற் றதுவும்
பங்கமின் றிறைஞ்சிச்
சவுனக முனிவன்
வீட்டினைத்
தலைப்படும் பரிசும்
மங்கரு வெப்பு
விழியவற் செகுத்த
சுரகரம் வானவர்
வழுத்திப்
புங்கவர் பெருமான்
சுக்கிலம் பருகு
வெப்புநோய்
போக்கிய வாறும் 10

309 புலிப்பத முனிவன்
காண்முளை போற்றிப்
பொங்குதீம்
பாற்கடல் பெற்று
வலித்திறல் பார்த்தன்
வலவனை முடிமேல்
மலரடி சூட்டி
ஆண்டதுவும்
கலித்தெழும்
இமையோர் மலைமகள்
மொழியாற் கரிசறத்
தெளிந்தருட் குறியில்
சலிப்பறும் இயக்க
வடிவுகொண் டணைந்த
தலைவனைத்
தொழுதுய்ந்த வாறும் 11

310 ஏதமில் பதிற்றுப்

பதின்மரோ டிரோன்
பதின்மரும் ஏத்திய
வாறும்
மாதர்மேற் றளியிற்
கவுணியன் பாட்டான்
மால்சிவன் உருவு
பெற்றதுவும்
ஆதரம் பூப்ப ஐங்கரப்
புத்தேள்
அனேகதங் காவதம்
பரசிக்
கோதற உலகம்
எண்ணியாங் குதவக்
கொடுத்திடும்
இறைமைபெற் றதுவும் 12
311 மகதியாழ் முனியும்
புத்தருக் கிறையும்

வலம்பொழில்
திருக்கயி லாயப்
பகவனைத் தொழுது
முப்புரத் தவரை
மருட்டிய பாவமாற்
றியதும்
இகலுநர்ச் செகுப்ப
இராகவன் வழுத்தி
எறுழ்வலி எய்திய
வாறும்
புகழுறுங் கற்கி
போற்றுபு கடைநாள்
கயவரைப் புரட்டிய
வாறும் 13
312 நறைமலர்ப் பனந்தார்
முடியவன் வழுத்தி
நலம்பயில்

வரம்பெறு மாறும்
அறைகழல் பகவான்
தொழுதுசெல்
        லுருவாய் அச்சுதன்
சென்னியைத் துணித்து
நிறைபெருங் கீர்த்தி
கவர்ந்து மீட்டுய்யப்
        பூசனை நிகழ்த்திய
வாறும்
மறையவன் தலையைக்
கொய்துவெம்
        பலிதேர் வயிரவன்
பூசித்த வாறும் 14
313 விண்டுநேர் விடுவச்
சேனனார் பரவி
        வீரபத் திரன்நிறத்
தணிந்த

வெண்டலை விழுங்கும்
ஆழியை
விகடக் கூத்தினால்
எய்திய வாறும்
மிண்டினால் வேள்வி
ஆற்றிய தக்கன்
வினைகெட
அருச்சித்த வாறும்
விண்டவர் புரத்தின்
உய்ந்திடும் மூவர்
தொழுதுமெய்
வரம்பெறு மாறும்
314 பொன்பெயர்
படைத்தோன்
கிளைஞரோ
டெய்திப் பூசைசெய்
தரசுபெற் றதுவும்

கொன்பயில்
விடையோன்
அருள்வழி
மாயோன்
மடங்கலாய் அவனுயிர்
குடித்துப்
பின்புகும் தருக்கைச்
சரபம்மாய்த்
ததற்பின்
பிழைகெடப் பூசித்த
வாறும்
வன்புடை இரணி
யாக்கனை
இறுத்த பன்றியின்
வழிபடும் இயல்பும். 16

315 அந்தகன் பரசிப்

புவிமுழு தாண்டு
கடைமுறை
அருள்பெறு மாறும்
வெந்திறல் வாணன்
இறுதியிற்
பரவி விறற்கணத்
தலைமை பெற்றதுவும்
கந்தமென் மலர்கொண்
டடிதொழு
தோண காந்தனுங்
கதிபெறு மாறும்
மைந்துற வழுத்திச்
சலந்தரன்
கடைக்கால்
வீடின்பம் மருவிய 17
வாறும்
316 கேசவன் திருமாற்

பேற்றினிற் போற்றிக்
கிளரொளி
ஆழிபெற் றதுவும்
வேசறு பரசி ராமன்ஏத்
தெடுத்து
வெம்மழுப்
படிபெறு மாறும்
தேசுரப் பரவி
யிரேணுகை யென்பாள்
தெய்வத மாகிய
வாறும்
மாசறும் யோகா சாரியர்
தொழுது
வயங்குதம் 18
பதம்பெறு முறையும்
317 சித்தசன் போற்றி
உலகெலாங் காமம்

செறித்திடும்
இறைமைபூண் டதுவும்
அத்தனார் ஏவ
லாற்றினால்
அணைந்த
அகிலதீர்த் தங்களும்
வணங்கிப்
பைத்தபாப் பல்குல்
பாகனார் தம்பாற்
பற்பல
வரங்கள்பெற் றதுவும்
தத்துநீர்க் கிறைவன்
அருச்சனை
யாற்றித் தங்குமப்
பதம்பெறு மாறும் 19
318 காசிவாழ் விசுவ
நாதனுங் காஞ்சிப்

பெட்பினால்
அணைந்து வைகியதும்
பூசனை உஞற்றிக்
காற்றினான்
கந்த வாகனாப்
பொலிவுறு மாறும்
மாசறு கோள்கள்
ஒன்பதும் வழுத்தி
எண்ணிய
வரம்பெறு மாறும்
தேசுறு வாமதேவநன்
முனிவன்
தொழுதுவெம்
பிறவிதீர்ந் ததுவும் 20
319 அகனுறப் பரசி
மார்க்கண்டி முதலோர்
இறப்பினைக்

கடந்ததும் அயன்மால்
இகலுறு செருக்கின்
வருவினை
தணப்ப
இலிங்கம்அங் கருச்சித்த
வாறும்
சகமெலாம் இறுத்து
முக்கணெம்
பெருமான் தங்குவீ
ராட்டகா சத்தின்
முகில்நிறப் புத்தேள்
பூசனை உஞற்றித்
துகிர்நிறம்
பெற்றிடும் முறையும் 21
மாண்டகு காமக்
கண்ணியை வணங்கி
மலர்மகள் சாபம்

மாற்றியதும்
பாண்டவர் முதலோர்
தொழுது நல்வரங்கள்
பரித்ததும் வணங்கி
யீசான
ஆண்டகை ஆசைக்
கிறைமையெய்
தியதும் அச்சுதன்
மச்சமாய்ப் போற்றி
வேண்டலர்ச் செகுத்து
வேத நூல் கொணர்ந்து
வேதியர் தமக்களித்
ததுவும் 22
321 மீயுயர் குறளோன்
அவுணனைச் சிறையிற்
புகுத்துமீண்
டிறைஞ்சிய வாறும்

மாயவன் பரவிக்
கடல்விடந்
    தாக்கும்
வெப்புநோய் மாறநின்
றதுவும்
நாயகி உருவிற்
கவுசிகை
    தோன்றி நாதனைப்
பூசித்த வாறும்
தூயமா காளப் பாப்பர
சிறைஞ்சித்
    தொல்லைவீ
டுறப்பெறு மாறும் 23

322 அண்ணலார் ஆணை
மறுத்தவெந்
    தீமை அறுத்திடக்
குமர கோட்டத்தில்

நண்ணிவீற் றிருந்து
சேயிலை
நெடுவேல் நாயகன்
பூசித்த வாறும்
மண்ணெலாம் பரவும்
மார்க்கண்ட முனிபால்
வஞ்சகங் கருதிய
மாயோன்
கண்ணுதற் பிரானை
அத்தலத்
திறைஞ்சி
அவ்வினை கழுவிய
வாறும் 24

323 சாத்தனார் போற்றி
உரிமைபெற் றதுவும்
மங்களைத்
தையல்போற் றியதும்

தீத்தொழில் அரக்கர்ச்
செகுத்துவந்
திராமன் பணிந்ததும்
தேவர்கோன் வலவன்
ஏத்திய வாறும் நாரணன்
பரவிப் பாப்புரு
இரித்ததும் மயானக்
கூத்தனார் முழுதுந்
தழலிடை யொடுக்கிப்
பண்டனைக்
கொலைசெய்த வாறும்

324 ஓவிய உலகைத்
தோற்றுவான் எங்கோன்
ஒற்றைமா
மூலத்தின் முளைத்துத்
தாவறு சிறப்பின்
இலளிதைப்பிராட்டி

தனைப்பயந்
தாங்கவள் விழியின்
மூவரைப் படைத்துச்
செய்தொழில் வகுத்துச்
செவியறி
வுறுத்துமொய் கூந்தல்
தேவியுங் கடவுள்
மூவரும் பரவச்
சிறப்பொடு 26
வீற்றிருந் ததுவும்
திருவிளை யாட்டான்
மந்தரத் துமையாள்
சிவபிரான்
விழியிணை புதைப்பக்
கருகிருட் பிழம்பின்
உலகெலாம்
மூழ்கிக் கடப்பருங்

கவலையுற் றதுவும்
வருவினை தணப்பப்
பூசனை புரிவான்
மழவிடைச்
செய்கையும் புகன்று
பெருநகர்க் காஞ்சிக்
கிறையவன்
விடுப்பப்
பிராட்டியங் கெய்திய 27
வாறும்
326 மெய்த்தநல் லறங்கள்
வளர்த்திடு
மாறும் விண்டுவீச்
சரமகத் தீசம்
மத்தள மாத வேச்சரம்
வணங்கிப்
போந்துமாந் தருவடி

முளைத்த
சத்தறி வின்பத்
தனிமுதற் பொருளைத்
தவத்தினாற்
கண்டுகொண்
டிறைஞ்சிப்
புத்தமிழ் தனையாள்
விதியுளி
வழாமைப் பூசனை 28
உஞற்றிய வாறும்
327 கருணைமீப் பொங்குந்
திருவிளை
யாட்டால்
அழைத்துறுங்
கம்பைநீர்ப் பெருக்கைக்
குருமணிக் குழையாள்
கண்டுளம்

பதைத்துக்
குழகனைத் தழுவிய
வாறும்
திருமுலைச் சுவடும்
வால்வளைத்
தழும்புஞ்
சிவபிரான் பொலிவுறப்
பூண்டு
மருமலர்க் குழலாள்
காணமுன் நின்று
வரம்பல அருளிய 29
வாறும்
329 இமவரைப் பிராட்டி
கவுரமா நிறம்பெற்
றெம்பிரான்
வதுவைவேட் டதுவும்
உமையவள் காள

வுரியினி லுயிர்த்த
ஒளியிழை
அவுணரை மாட்டி
விமலநா யகன்றன்
அருள்பெறு மாறும்
மேதகு விம்மிதத்
திறமும்
அமைவர ஒழுகும்
ஒழுக்கமும் எங்கோன்
அருட்சிவ
புண்ணியப் பேறும்
329 மற்றுமோ ராற்றால்
கிளந்திடும் திறத்தின்
மால்வரைக்
கயிலையின் உமையாள்
கற்றையஞ் சடையார்
விழியிணை

புதைத்துக்
காஞ்சியிற் பூசனை
யாற்றும்
பெற்றியும் அந்தர்
வேதியுங் கரிகால்
வளவர்கோன்
பெருமையும்
வினைநோய்
செற்றிடுந் தீர்த்தம்
முதலிய மூன்றின்
சிறப்புமீண்
டியம்பிடப் படுமால். 31

ஆகத் திருவிருத்தம் 329
--------------

---

## **4.** வரலாற்றுப் படலம் **(330-**

357)

நைமிசாரணியச் சிறப்பு

330 எழுசீரடியாசிரிய
விருத்தம்

மிடல்கெழு தவத்தோர்
வேள்விசெய் வினைக்கு
வேண்டிய
வேண்டியாங் குதவக்
கடவுளான் பயிலுங்
காட்சியால் அவிஉண்
கைக்கொளத்
துதைந்தவா னவரால்
தொடர்வுறும் ஓமப்
புகை தழீஇச் சுரும்பர்
உளர்தரப்

பன்மலர்ப் பொலால்
அடர்தருங் காமர் கற்பக
வனமே யாயது
நைமிசா ரணியம். 1

331 தாதவிழ் கடுக்கை
நறுந்தொடை மிலைச்சுந்
தம்பிரான் அடியல
துணரா
மாதவர் இயற்று
மகவினை சிதைப்ப
வருகரும் தயித்தியர்
அவர்தங்
காதுவெஞ் சாப
வலிக்குடைந் தோடுங்
காட்சியே கடுக்கும்
அம்மகத்தீ
மீதயர்ந் தண்டச்

சுவர்த்தலம் உரிஞ்ச
விசும்பெழு
நறுபுகைப் படலம். 2
332 கருந்திரை அளக்கர்
அகடுடைந் தெழுந்து
கனையிருள் பருகு
வெங்கதிரோன்
இருந்தவர் வேள்விக்
கலத்தவிப் பாகம்
ஏற்பவந்
தணுகுவோன்மான
மருந்தெனக் கிளைத்து
வானுற நிவந்த
வளம்பொல்
கிளைகளைக் கரத்தால்
திருந்துற ஒதுக்கிக்
குனிந்துபுக் குலாவிச்

சேணிடைப்
போய்நிமிர்ந் துறுமால் 3
333 சிறகர் வண்டிமிரும்
வட்டவாய்க் கமலச்
செழும்பொகுட்
டரசுவீற் றிருக்கும்
மறைமுதற் கிழவன்
முனிவரர் வேண்ட
வலைத்தனன்
விடுத்தபுல் நேமி
இறவுறா தின்று
மாயிடை உறைவ
தெனக்கவின்
காட்டிடுந் தேத்தீ
அறைதரச் செறிந்து
நறவம்ஊற் றெடுக்கும்
அரும்பெறல்

மதுவிறால் வலயம். 4
334 விரும்பிய விடபந்
தாங்குதோற் றத்தால்
விளங்கெரி
உருவினிற் பூத்த
வரும்பணி கொண்ட
காட்சியாற் பெரிய
வரையவண்
இருந்தவராக
இரும்புவி உய்யக்
கோடலால் யாரும்
ஏத்திடும்
பெற்றியால் உலவப்
பெரும்பெயர்க்
கயிலைக் கடவுளே
போலும்
பிறங்கொளி

335 திசைமுகன் உந்தி
யுறவலை நேமி
செர்ந்திடுங்
கொள்கையால் என்றும்
அசைவில்வா
னவர்க்குப் புரைஅவி
அமிழ்தம்
அளித்தலாற் பூமணம்
பெறலால்
வசைதபு காட்சிக்
கருநிறக் கருவி
மழைமுகில்
மேனிவந் தழகாய்
இசைதலாற் சார்ங்கம்
ஏWதியோன்
நிகர்க்கும்

இணையிலா நமிசக்
காடு. 6

336 குலவுநால் வாய்கள்
மருவலால் அகலங்
கொண்ட முந்நூல்
வயங்குதலால்
சலமற வேத மொதலால்
வனத்துத்
தாமரை
இருக்கைமே வுதலால்
பலபொறிச் சுடிகை
பையராச் சுமந்த
பரவை
சூழ்புடவியே முதலா
மலர்தலை உலகம்
முழுதுமீன் றளித்த
வள்ளலாம் நைமிசப்

புறவம்.


337 முனிவர் கூட்டம்
புகலுமிவ் வனத்தில்
வசிட்டன் வேதா
ரணியன் புலத்தியன்
துருவாசன்
சுகன்வசுச் சிரவன்
அணிமாண்
டவியன்
சுனப்புச்சன் சமுவர்த்தன்
மணிமே
சகன்சுனச் சேபன்
இரைக்குவன்
சம்பு தற்பர னாத்தி
ரேயன் சௌ
நகமுனி புலக னாசுவ
லாயனன்

சமதக்கினி சங்கன் 8

338 இரைவதன் குசுரு
விந்தன்மா தேசன்
இலிகிதன் பராசரன்
கற்கன்
கிருது அக்கினியன்
பருப்பதன் நாசி
கேதன் நாரதன்
அசிகர்த்தன்
உருகு விசுவாமித்திரன்
குணி பரத்து
வாசன் உத்தா
லகன்வாசச்
சிரவன் சாண்டிலியன்
காசிபன்
வாமதேவன்
தாற்பிரியன்

இஅசனியே 

339 கண்ணுவன் முதலாம்
எண்ணரு
முனிவர்
கழிபெருஞ் சீர்த்தியர்
மாசு
மண்ணிய மனத்தார்
பசுபதி அடியார்
வடிவெல்லாம்
நீறுசண் ணித்த
புண்ணியர் மும்மைப்
புண்ட நிரையார்
அக்கமா
லிகையர்போர்
விடையூர்
அண்ணல்வாழ் தலத்திற்
பற்றினோர்

அன்னான்
அருச்சனை இயற்றுமார்
வத்தார் 10

340 அங்கமும் மறையும்
தெளிந்தவர் வேதம்
அந்தித்த அறிவினர்
விமலர்
தங்குமஞ் செழுத்தே
கிளப்பவர் பொறியைத்
தடுத்துயர்ந் தவர்மக
மனைவி
செங்கன லோடும்
உறைபவர் தமைப்போற்
சிற்றுயிர்
அனைத்தையுங் காணும்
பொங்குபே ரருளின்
எல்லையர் இனையோர்

பொலிவுற
ஒழுங்குடன் குழுமி
341 கறைமிடற் றிறையைக்
கண்ணுறக்
காணுங் காடிசியாங்
கணிச்சியின் அல்லால்
மறவினைக் கனிகள்
மல்கிய உலக
வாழ்வெனும்
நச்சுமா மரத்தை
இறுமுறை காண்ப
தரிதெனத் துணிந்தார்
இதுபெறும்
உபாயம்மற் றெவனென்
றறிவினில் நெடும்போ
தாய்வுழி அவருள்
அருந்ததி

கொழுநன்ஈ அறையும் 12
342 தவம்
அறுசீரடியாசிரிய
விருத்தம்
தவமே மேலாம்
நெறியாகும் தவமே
சிவனார் தமைக்காட்டும்
தவமே துறக்கம்
அடைவிக்கும் தவமே
நரனைத் தேவாக்கும்
தவமே வலாரி
திசைக்கிறைவர்
சார்ங்கன் அயனு
மாக்குவிக்கும்
தவமே கிடைப்பிற்
கிடையாத துண்டோ
என்று சாற்றினானால் 13

343 அறம்

அறமே மறங்கள்
முழுதழிக்கும் அறமே
கடைனள் உலகேற்றும்
அறமே சிவனுக்
கொருவடிவ மாகும்
சிவனை வழிபடுவோர்க்
கறமே எல்லாப்
பெரும்பயனும்
அலிக்கும் யார்க்கும்
எவ்விடத்தும்
அறமே அச்சந்
தவிர்ப்பதென
அறைந்தான் சாதா
தபமுனிவன் 14

344 கொடை

கொடையே எவர்க்கும்

எப்பேறுங் கொடுக்கும்
நெறியிற் பிறழாத
கொடையே யாருந்
தன்வழியின் ஒழுகச்
செய்யும் குறதீர்ந்த
கொடையே பகையே
உறவாக்கும் குலவும்
பூதம் அனைத்தினையுங்
கொடையே புரக்கும்
என்றுள்ளங் கொள்ளப்
புகன்றான் கவுதமனே

345 வாய்மை
மெய்யே சிறந்த
பெருநலமாம் மெய்யே
எவையும்
நிலைபெறுத்தும்
மெய்யால் அழல்கால்

கதிர்பிறவும் தத்தந்
தொழிலின் விலகாவாம்
மெய்யே எவைக்கும்
இருப்பிடமாம் மெய்யே
மெய்யே சுவமாகும்
மெய்யே பிரம
பதமுமெனப் புகன்றான்
வினைதீர் காசிபனே 16

346 வேள்வி
வேள்வி எச்சம் ஒன்றே
இருமையினும் மேலாம்
இமையோர்க்
குவப்பாவ
தெச்சம் ஒன்றே
மகத்திறையாம் எம்மான்
விழையப் படுவதுவும்
எச்சம் ஒன்றே நனிசாலச்

சிறந்த பொருளும்
இருங்கரும
எச்ச நிகர்வே
றில்லையெனப் பரத்து
வாசன் இயம்பினனால் 17
347 மகவு
மகவே மேலாங்
கதியாக்கும் மகவான்
உலகந் தனைவெல்லுங்
மகவின்மகவான்
முடிவின்மை எய்தும்
மகவின் மகவளித்த
மகவான் மேலைப்
பதமுறுந்தென் புலத்தார்
கடனை மாற்றுவதும்
மகவானன்றி
யில்லையென

வகுத்தான் தெரித்துக்
கண்ணுவனே
348 துறவு
துறவே அறங்கள்
எவற்றினுக்கும்
பெரிதாம் விடையூர்
தோன்றலுக்கும்
துறவே உவகை
வரச்செய்யும் துறவே
அயன்மால்
உலகளிக்கும்
துறவே ஈச
னிடத்திருத்தும் எவரும்
மேலாச் சொல்லுவதும்
துறவே யாமென்
றெழுந்துநின்று
சொற்றான் சைவத்

349 சூதமுனிவர் வரவு

வேறு

இன்ன வாறுபன்
முனிவரும் இயம்பினர்
பிணங்குழி இவர்ஈட்டு
நன்னர் வானவங்
கொணர்ந்தென
வாயிடைநணுகினான்
விடைஊரும்
என்னை யாளுடை
இறையடி தைவரும்
இடையறாத்
தியானத்தான்
பன்னு மெய்த்தவப்
பராசரன் பயந்தருள்

பண்ணவன் மாணாக்கன் 20
விளங்கு நீற்றொளி
கதிர்செய வீங்கிருள்
அக்கமா லிகைவீசும்
வளங்க ளிந்தபொன்
மேனியான் புண்ணியம்
வடிவெடுத்
தெனவந்தான்
துளங்கு றாதுயர்
புராணமுற் றளந்தறி
தொல்லையோன்
அமரர்க்காக்
களங்க றுத்தவன்
உண்மைதேர்ந்
துயிர்க்கெலாங்
கருனைகூர்ந்
தருள்சூதன் 21

351 முனிவர் வினாவுதல்
புக்க சூதனை முனிவரர்
யாவரும் பொங்கிய
பெருங்காதல்
மிக்க ஓகையின்
எதிர்கொடு பூசனை
விதியுளி வழாதாற்றித்
தக்க வாதனத்
திருத்தினர் வினவுவார்
தறுகண்ஜம்
புலவாழ்க்கை
ஒக்க நீப்பயாம்
முன்னரே அருந்தவம்
உஞற்றினம் அதனாலே 22

352 வென்றி வெள்விடைப்
பிரானடி காண்பதே
வீடுபேற் றினுக்கேது

என்று தேறினம்
காண்பதற் குபாயம்மற்
றிதுவெனத்
தெளிகிலேம்
ஒன்ற லாதன வேறுவே
றுரைத்தனம் உயங்கினம்
பிணங்குற்றேம்
மன்ற கண்டிலேம்
துணிவுமெய்
யுணர்வினான்
மலக்குறும்
பறச்செற்றோய் 23

353 எங்கள் பாக்கியப்
பயனென நீஇவண்
எய்திடப் பெற்றேம்யாம்
கொங்கு யுஇர்த்தார்த்
துளவனே வியாதன்அக்

குலமுனி அருளாலே
அங்கண் மூவறு
புரானமும் உணர்ந்தனை
அறமுதல் பொருள்
நான்கிற்
பொங்கு சீர்த்தியோய்
நீஅறி யாதது
புவனம்மூன்
றினுமில்லை 24
354 அத லாற்பல நெறிய்னுந்
துணிந்தவா றரன்திரு
வடிகாண்டற்
கேது எங்களுக் கருளுதி
வறிதுநீ ஏகலை
உயர்வானிற்
பாத வம்பொரப்
பெரியவர் காட்சியும்

பயன்படா
தொழியாதால்
சூத மாதவ என்றலும்
அகங்களி துளும்பிஓ 25
துவன்சூதன்
355 சூதமுனிவர் விடை
கூறுதல்
மொழியும் இப்பொருள்
மூவறு புரானத்துட்
காந்தமூ
விருகூற்றொஇற்
கழிவில் சீர்ச்சனற்
குமாரசங் கிதையினிற்
காளிகா கண்டத்தில்
தழுவு தீர்த்தமான்
மியத்தது நந்திபாற்
சனற்குமா ரன்கேட்டங்

கழிவி லாஅருள்
வியாதனுக் குரைத்திட
அவனெனக் 26
கருள்செய்தான்
356 நீயிர் பேரறி வாளராய்
விரதநன் னெறியினிற்
பிறழாமே
தூய மெய்த்தா
வலியினாற் பாமலத்
துகளறுத்
துமையோர்பால்
நாயனாரருள் பெற்றுளீ
ராதலின் நன்றும்இப்
பொருள் உங்கட்
கேய ஓதுவன் ஒருங்கிய
மனத்தொடுங்
கேண்மின்க

ளெனலோடும் 27
357 அண்டர் நாயகன்
நடம்புரி நாயகன்
அடியவர் உளக்கோயில்
கொண்ட நாயகன்
திருவடித் தர்சனங்க்
கூடுதற் குபாயஞ்சீர்
மண்டு தீர்த்தமான்
மியத்துநீ பெற்றத்வ்
வாறெனக் கடாவுற்ற
பண்டை மெய்த்தவர்க்
கிருமையும் புலப்படப்
பகரலுற் றனன்சூதன் 26

ஆகத் திருவிருத்தம் 357

--------------

# 5. சனற்குமாரப் படலம் (358 - 413)

மகாமேருச் சிறப்பு

358 எழுசீரடியாசிரிய விருத்தம்

தொடுகடல் வரைப்பின் மன்பதைத் தொகைகள்
சோழன்
மீனவனென ஈண்டிப்
படர்பொலங் குவைகள்
கவர்ந்துறா வண்ணம்
பரிந்துகாப் பவரென
அசுரர்
கடவுளர் இயக்கர்
சித்தர்கந் தருவர்

கின்னரர் சாரணர்
பிறரும்
உடனுற நெருங்கிப்
போற்றமு
உலகும் உருவிமேல்
நிவந்தது மேரு 1
359 சேர்ந்தன முழுதுந்
தன்நிற மாக்குஞ்
செய்கையால் தனக்கின
மாகிச்
சார்ந்தமா ணிக்க
வண்ணர்ஏ கம்பர்
தமக்கலால்
வணங்கிடாதாகி
வார்ந்தபல் கோளும்
நாள்களும் வலம்வர
இராப்பகல் விளக்கி

நேர்ந்தபே ராசை
எட்டையும் பகுத்து
நின்றதத் தமனியக்
குன்றம் 2

360 எண்சீராசிரிய விருத்தம்

நயக்கும் மற்றிதன்
ஒளிபரந் திமையோர்
நாடு
பொன்னிறம்
படைத்ததென் றெவரும்,
வியத்த குங்கிரி
மணிபல வரன்றி மீது
நின்றிழி
முழங்குவெள் ளருவி
வயக்க மாண்டமுப்
புரிசை யன்றிறுத்த

வள்ளல் பூட்டுவிட்
டிருத்திய சிலையின்
இயக்கம் மேவுபல்
பொறியபன் னகநாண்
இரைந்து
கொண்டொளிர் 3
தொடக்கமே ஒக்கும்
361 மலைஎ வற்றையுஞ்
சிறகரி வலாரி வயங்கெ
டப்பொரு
தழித்தவன் வணக்குஞ்,
சிலையி னைப்பறித்
தூங்குவைத் தென்னத்
திவலை இந்திர
திருவிலைக் காட்டும்,
அலைதி ரைப்புனல்
அருவிசூழ் மேரு

அம்பொன்
மாற்றினில் அதிகமா
யதுதான்,
நிலைபெ றத்தவர்
எண்ணீலர் குழீஇச்செய்
நிறத வக்கனல்
கதுவலிற் போலும் 4
362 சதசிருங்க மலைவளம்
தடாத பேரொளித்
தமனியம் பழுத்த
தண்ண றாச்சுனைக்
குடுமியங் குவட்டு
வடாது மாமலைக்
காந்தியின் பிறக்கம்
மடங்கிடாஉபல்
சுடர்விரித் தெழுந்த
கெடாத தோற்றமே

உறழமற் றதன்மேற்
கிளர்சு ரும்பினம்
பெடையொடு தழுவி
விடாது பண்படு
பொழிற்சத சிருங்க
வெற்பெ
னத்திசை
போயதொன் றுளதால்

363 குரவு மாதவி
உழிஞைமந் தாரம்
குருந்து
பாடலம் பாலைமுந்
திரிகை
மருது போதி
பிடாஞெமை ஓமை
வஞ்சி
காஞ்சிகுன்

குமம்நமை ஒடுவாண்
அரைத ளாஉதி செருந்தி
சேளகினம் அகில்ப
லாசுசந் தில்ல மா
வில்லம்
வரைத மாலம்
மாதழிளை கணி
அதிங்கம் 6
வகுளம் இன்னன
நெருங்கின ஓங்கும்
364 அன்றி னார்புறம்
அழலெழ நகைத்த
அண்ணல் சேவடிக்
கன்பறா இயல்பின்
துன்று மெய்த்தவ யோகி
யர்க்கெலாந்
தூய நற்றவச்

சாலையு மாகித்
தென்றல் ஊர்தரப்
பூமணங் கஞலத் தெளிபு
 னற்சுனை அளவில்
கவின்று
பொன்றி டாக்கட
வுளர்முத லோர்க்குப்
 போக பூமியு 7
மாயதப் பொருப்பு
அங்கண் வாழ்தரும்
அயன்மனைக் கிழத்தி
 அங்கி நாப்பண்நின்
றருந்தவஞ் செயல்போற்
ஒங்கு லாந்துவர்ப்
பங்கயத் திரைதேர்
 குறிப்பின் ஓதிமம்
அசைவற இருக்கும்

பொங்கு வெண்டிரைத்
தீர்த்தத்தின் மாடே
        புரங்க டந்தவர்
வரமவட் குதவித்
தங்கு காட்சியின்
நறுமலர்
பொதுளித்ததைக
        டுக்கைபொன்
சொரிவன உடைத்தால் 8
366 மீது சந்திர சூரியர்
கிரணம் விரவ
        லாமையின்
ஒருபொழு தலர்ந்தோர்
போது கூம்புமச்
செய்கையாங் கின்றிப்
        புரிமுறுக்
குடைந்தென்

றுமோரியல்பின்
கோதில் பன்மணிக்
கதிரொளி வருடக்
குளிர்ந்த லர்ந்திரண்
டவத்தையுங் கடந்து
மாதர் வெண்பிறைக்
கண்ணியர் அடிசேர்
மாந்தர் ஒத்துள
வலஞ்சுளை மலர்கள் 9
367 வென்ற ஐம்புல
வாழ்க்கையர் வடிவின்
விலங்கு பூதியும்
விரைகமழ் கடாத்த
குன்று போலுயர்
களிற்றுநீள் கோட்டுக்
குலவு முத்தமும்
வேயுகு மணியும்

துன்றி வானிலாக்
கற்றைகால் வெண்மை
தூய பொன்மையை
விழுங்கிய தேயோ
அன்றி அவ்வரைப்
பொன்மையே
வென்மை
தனைவி ழுங்கிய
தோஅது அறியோம்
368 இனைய சீர்பெறு
சதசிருங் கத்தின்
எண்ணி
லா·ப்பெரு
வளத்தன வாகி
நனைம லர்ப்பொழில்
சண்பகம் சரளம் நரந்தம்
தெங்குகோங்

கரம்பைகள் உடுத்து
வனச நீள்சுனை மல்கிய
பிரம வனமொன்
றுள்ளது மற்றதன்
நாப்பண்
தனைநி கர்ப்பது
நான்மறைக் கிழவன்
தான மாயது 11
பிரமமா நகரம்

369 சனற்குமார முனிவர்
யோகுசெய்திருத்தல்
எழுசீரடியாசிரிய
விருத்தம்

பொற்பமர் இனைய
நகர்க்கொரு பாங்கர்ப்
பொங்கொளி

மடங்கலே றொன்று
பற்பல மடங்கல் சூழவீற்
றிருக்கும்
பரிசெனத் தவளநீற்
றொளியின்
அற்புதக் கோலத் தறிஞர்
சூழ்ந்தேத்த
அருட்சனற்
குமாரமா முனிவன்
எற்பணிப் பெருமான்
சரணுளத் திருத்தி
யோகுசெய் 12
திருக்குநாள் ஒருநாள்
வைகறை எழுந்து
கங்கைநீ ராடி வானவர்
முனிவர்தென்
புலத்தார்

செய்கடன் உவப்பத்
தெண்புனல் இறைத்து
நியாசமுந் தியானமு
மாற்றிப்
பொய்களை விரசை
அங்கியின்
விதியாற் பூத்தநீ
றங்கையின் எடுத்து
நைகரந் தீர்ந்த
அன்பொடு நியாச
நடைபெறு 13
தியானமுன் னாக
371 அடைவுறு பஞ்சப்
பிரமமந் திரத்தால்
அங்கியென்
றற்றொடக் கத்தான்
முடிவில் சாபால

மனுக்கள் ஏழாற்றான்
மூவிரண் டதர்வமந்
திரத்தால்
வடிவுறும் இடக்கை
வைத்துமுன் முக்கால்
மந்திரித் தறவினால்
குழைத்துக்
கடிகெழு சென்னி
முதலடி காறும்
பிரமமோர்
ஐந்தையுங் கழறி 14
372 நிறையஉத் தூளஞ்
செய்துபின் திரியம்
பகங்களால்
நிகழ்த்துமஞ்
செழுத்தால்
அறலினா சமித்துப்

பின்னருந் திரியா
யுடந்திரி யம்பக
மனுவான்
முறையினஞ் செழுத்தால்
புண்டர
மூன்றும் முச்சுடர்
முக்குணம் மும்மை
மறைகள்மூ வுலகு
முந்நிறம் முத்தீ
வடிவெனச்
சிந்தையிற் கண்டு

373 ஐந்துமூ விடத்தும்
அழகுற வணிந்தங்
கருக்கற்கு சந்திந்நிர்
உதவி
இந்திர திசையை
நோக்குபு மோனம்

எய்திநல் லாதனத்
தும்பர்ப்
பந்தமில் சுகஞ்சேர்
இருக்கைய னாகிய
அஞ்சபூ தத்தை
ஒன்றொன்றின்
உந்துற ஒடுக்கி
யாவியைப் பிரம
ரந்திரத் தொடுக்கிய
பின்னர் 16

374 பாதகக் குழிசிப்
புலையுடல்
தொடக்கைப்
பவனபீ சத்தினால்
உணக்கிப்
போதர வன்னி பீசத்தால்
வேவப்

பொடித்தது
வாரிபீசத்தால்
சீதமா நனைத்துத்
தரணிபீ சத்தால்
திரட்டிவே
றுறுப்பெலாம் பகுத்து
மேதகச் சத்தி பீசத்தால்
நிறைத்து
மேயபின் விதியுளி 17
உயிரை
அசுதீர் உடம்பின்
முன்புபோல் இருத்தி
அங்கணா தாரபங்
கயத்துத்
தேசுறும் வன்ன
ரூபியாய் நிறைந்த
தேவியை

முறைவழா
தமைத்துப்
பேசிரு பத்தோ ராயிரத்
தறுநூ றுயிர்ப்பினைப்
பிரித்தச பையினான்
மாசறு மானை
முகப்பிரான் முதலோர்
மகிழ்வுறும்
படியவர்க் குதவி 18
376 அவியாம் இலிங்கத்
தந்தரியாக
அருச்சனை
விதியுளி யாற்றி
மேவிய பின்னர்ப்
புறத்தினும் சென்னி
முகமுதல்
விளம்புறுப் பெல்லாந்

தேவியை ஐம்பான்
எழுத்துரு வான
செல்வியை
நலம்வர அமைத்துப்
பாவுறும் பிராணா
யமங்கள் முறையிற்
செய்துபின் பரிதிகா
ணளவும் 19
377 அருமறைக் காயத்
திரிப்பெரு மனுவை
யாயிரத் தெட்டுருக்
கணித்துக்
கருதிய யோக சித்தியின்
பொருட்டுக்
கணேசனை முன்புபூ
சித்துப்
பரிதிமண் டிலத்தும்

தண்டிலந் தனினும்
பகர்தரு லிங்க
மூர்த்தியினும்
மருவுமங் குட்ட
ரூபியாஞ் சிவனை
வரன்முறை
அருச்சனை புரிந்து
378 யோகினைக் கூடித்
தன்னுடை இதயத்
தீசமென் றுரைக்கும்
எட்டிதழும்
சேகறும் வயிராக்
கியமெனும் பொகுட்டும்
செப்புவா மாதிகே
சரமு
மாகிய கமல மாவியா
யாமத் தலர்தரக்

கண்டு
மற்றதன்மேல்
ஏகன்மும் மூர்த்தி
யாகிமுக் குணங்கட்
கிறைவன்மும்
மண்டில ஈசன் 21

379 முக்கணன் புட்டி
வருத்தனன் நீலப்
பொன்மயன்
முதிர்கறை மிடற்றன்
தக்கஈ சானன் வன்னிரே
தாநற்
சத்தியன்
அருவினன் உருவன்
புக்கசீர்ப் புருடன்
விச்சுவ ரூபன்
புருட்டுதன்

சிவன்புரு கூதன்
வைக்குமெய்ச் சத்துப்
பராபரம்
    பரமான் மாமகத்
துயர்பரப் பிரமம் 22
என்றெடுத் துரைக்கும்
பெயர்களின்
பொருளாய்
    இயம்பரும்
பரவெளி நாப்பண்
நின்றபே ரொளியின்
பிழம்பினை இனைய
    சத்தியி னோடுநேர்
நோக்கி
ஒன்றுதன் உயிரை
அப்பெரும் பொருளோ
    டொன்றுவித்

திருபகுப் பிறந்து
மன்றயோ கத்தின்
அசைவற இருந்தான்
மறையவன்
ஈன்றருள் மதலை 23
381 சிவபெருமான் திருவுலா

அங்கவன் அவ்வா
றரியயோ கத்தி னாநந்த
பரவச னாகி
ஓங்குபே ரறிவின்
சிழித்தனன் உறங்கும்
எல்லையின்
உம்பர்தம் பெருமான்
மங்க்குயிர் கிளவி
மலைமகளோடு
மலர்தலை

உலகாத் தளிப்பான்
வீங்கிய கருணை
ஊற்றேழத் தரும
வெள்விடை 24
ஊர்திமேல் கொண்டு
382 உரகர் தருவர் இராக்கதர்
சித்தர் யோகிக
ளாசைகாப்பாலர்
நிரைமணி மோலி
பாதுகை வருட நிகழுமா
காஉடன் ஊகூ
விரிபுகழ் ஏனை
வீணைவல் லவரும்
விருதெடுத் தோதியாழ்
தடவ
இருவிசும் பகத்தின்
இனிதெழுந் தருளி

உலவினன்
என்னையா ளுடையான்
383 அதுசனற் குமாரன்
யோகினில் வைத்த
கருத்தினால்
அறிந்தில னாகிக்
கதுமென இருக்கை
எழாமைகண் டெம்மான்
கருணை கூர்ந்
துமையவளோடு
விதுவணி சடிலத்
தெம்மையே உளத்தின்
விழைதர
இருத்திமற் றெம்பாற்
பொதுவற ஒருக்கு
மனத்தினன் என்னாப்
புரிவொடும்

கோயில்புக் கனனால் 26
384 சனற்குமாரமுனிவர்
சாபமேற்றல்

நந்தியெம் பெருமான்
நோக்கினன் வெகுண்டு
நலமிலா ஒட்டக
மேபோல்
அந்திலெம் பிரானை
இகழ்ந்திருந் ததனால்
அவ்வுரு வாகெனச்
சபிப்பச்
சிந்தைகூர் முனியும்
ஒட்டக மாகிச்
செழுநிலத் துழிதரு
காலை
முந்தைஞான் றியற்று

நல்வினைப்
பயனான்
முன்னினன் கச்சிமா 27
நகரம்
பிரமன் கச்சபேசரைப்
போற்றல்
அயிடைக் கச்ச
பேசனாம் இறைவன்
அமர்ந்தருள்
கோயிலின்மாடே
காயுமைம் பொறியின்
உலகெலாம் படைக்கும்
கருத்தினான்
மலரனைப் புத்தேள்
தூயமா தவத்தின்
இனிதுவீற் றிருக்குஞ்
சூழலின் நணுகுத

லோடும்
தீயபா வத்தின் ஒட்டக
வடிவாஞ்
சிறுவனைக் 28
கண்டனன் தாதை
386 பாவடி நெடுங்கால்
திரையெழு
தோல்வாய்ப்
பழியுடல்
நெளிந்துநீள் கழுத்தின்
யாவரும் இழிக்கும்
ஒட்டக யாக்கை
இளவலை
நோக்கிநின் றந்தோ
செவுயர் கொடியான்
அடித்தொழும் பாற்றுந்
திருவருட்

சூரியனாம் இவனுக்
காவவென் செய்கோ
என்மகற்கிதுவந்
தடுத்ததெவ் 29
வாறென எண்ணி
387 யோகினைக் கூடி
முன்நிகழ் வனைத்தும்
உணர்ந்தனன்
அவ்வினை தவிர்ப்பா
னாகமமுறையாற்
கச்சபே சன்பால்
அடைந்து
பூசனை செய்தேத்
தெடுப்பான்
மாகர்போற் றிசைக்கும்
இளம்பிறை
மோலி வள்ளலே

உலகளித் தக்கும்
ஏகனே யாமை
உர்வொழித் தரியை
யாண்டநின் 30
இணையடி போற்றி
388 காசிகே தாரம் புட்கரங்
குருகேத்
திரங்கடி நைமிசங்
களினும்
ஓசைகொள் காஞ்சி
அதிகமென் றுரைப்ப
துரைப்பிர
மானமொன் றன்றால்
ஈசனே நீயும் உமையுமே
அல்லால்
இந்நகர் படைத்தவர்
இல்லை

தேசுற யானே
கண்ணுறக் கண்டு
தெளிந்ததாம்
எந்தஊ ழியினும் 31
389 புரியுநின் அருளால்
உயர்ந்தவர் அனேகர்
புரவுபூண் டெட்டுரு
வெடுத்தோய்
விரிவிழி உமையால்
மணந்தபே ரின்ப
வடிவமே
இடும்பைநோய்
அறுக்கும்
கருனைவாரிதியே
இரங்கிடாய் எமக்குக்
களைகண்நீ
யன்றிவே றிலையென்

றிருகணீர் சொரிய
நெக்குநெக் குருகி
யேத்தினான்
நாத்தழும் பேற 32
390 கச்சபேசர் காட்சி
கொடுத்தல்
அறுசீராசிரிய விருத்தம்

திசைமாமுகன்
வாழ்த்தொலி
அஞ்செவியிற்
சென்றேறலு
மாரருள் உந்துதலான்
மிசைவானவர் பூதக
ணப்புடையின்
மிடையப்பெரு
மானெதிர் நின்றருளி

வசைதீர்தர ஏட்ட
வரம்தருகேம்
மைந்தாவுரை
செய்கென
வாய்மலர்
இசைபாடினன் ஓகை
துளும்பிடநின்
றிதுகூறுத லுற்றனன்
வேதியனே
33

391 நின்றொண்டு
வழாதவன்
என்புதல்வன்
நீடுந்தவ முற்றுசனற்
குமரன்
முன்றிண்சத கோட்டிடை
நினிருதாள் முன்னிச்
சிவயோகு

முயன்றுதவத்
தொன்றும்பொழு
தாயிடை நீவருதல்
உணர்ந்தா
நலன்நிட்டை
கருத்துறலால்
அன்றங்கருள் நந்தி
சபித்தனனால்
அம்ரொட்டக
வாக்கைய னாயினனே
34

392 பிரமன் நந்திதேவரை
வேண்டல்

இன்றேயிது தீர்த்தரு
ளென்னஇரந்
தேத்தித்தொழ
எந்தையும் எம்மடியார்

நன்றேகொடு செய்தன
யாவையவை
நம்மால் விலகா
வதனான் மறையோய்
பொன்றாதிது நந்தி
தவிர்ப்பனெனப்
புரிவுற்றருள்
செய்துமறைந் தனனால்
அன்றேமல ராளி
தவத்திறனால்
அங்குற்றருள்
நந்தியை வேண்டுதலும் 35

393 நந்திதேவர் கருணை
கூர்தல்
நந்திப்பெரு மானும்
மகிழ்ந்தலரோய்
நங்கச்சப ஈசன்

எதிர்ப்படலால்
அந்தப்பொழு துன்புதல்
வன்பெறுசா
    பந்தீர்ந்தது
வாஇஉம்
அன்பர்கள்பால்
பந்தித்த பெருங்கரு
ணாகரனென்
    பதுநாட்டினன்
எம்மிறை நின்புதல்வன்
கந்தப்பொழில் சூழ்வட
மேருவினங்
    கெண்ணெய்துக
இவ்வுரு நீங்குமரோ 36
394 நவைதீர்ந்தபின் எம்மரு
ளாலிவன்நம்
    மாணாக்கனு மாகி

நயந்துதவும்
சிவதீக்கையை யுற்று
விரிந்தகலைத்
திரள்யாவும்
உறீஇச்சிவ
ஞானமுணர்ந்
தவமாற்றுவன் என்றருள்
செய்தகல
அலரோன்அவண்
மைந்தனை அன்புறுதன்
இவர்வுற்ற கணத்த
ரோடும் புகுவித்
திப்பாலரு மாதவம்
முற்றியபின் 37
உயர்கச்சியில் ஓங்கு
பலாசடியின்
உறைச்சப ஈசன்

அருட்கருனை
பயில்வுற்று முறைப்படி
எவ்வுலகும்
பண்டேயென நன்கு
படைத்தனன்மற்
றியல்பின்அட
மேருவின் நந்திப்பிரான்
இருக்கு
நிலையத்தின்
மலர்த்தலைவாழ்
அயன்மைந்த
னொடுஞ்செல்
கனத்தவர்
அப்பெருமானடி 38
ஏத்தி இயம்புவரால்
396 நந்திதேவருக்குச்
சனற்குமார முனிவர்

மாணாக்கராதல்

வேதாவெமை
யேயினன்
நீயிர்கள்போய்
மேருப்புடை
நந்திமுதல் குரவன்
பாதாம்புய மேத்தியிம்
மைந்தனவன்
மாணாக்கனு
மாம்படிசேர்த் தியிவண்
போதீரென என்றருள்
பெற்றவர்தாம்
போகத்தன்
அருட்கணின்
ஒட்டகமாம்
கோதாருரு நீத்தொளி

பெற்றவனை
மாணாக்க
னெனும்படி 39
கொண்டனனே
397 வேறு
அன்னோன் அவன்பால்
தீகையுறீஇ வழிபா
டாற்றி முழுதுணர்ந்தான்
முன்னர்ப் புராணம்
நியாய நூல்கரும
முதல்நூல் தருமநூல்
மன்னு சீக்கை ஏழ்சந்தை
வழங்கும் ஒன்பான்
வியாகரனம்
பன்னும் எண்ணூல்
முக்கந்தம் பலவும்
முறையின் ஓதினனால் 40

398 ஏயுங் கற்ப சூத்திரங்கள்
இருக்கு முதலா
நான்மறைகள்
அயுள் வேதம்
வில்வேதம் அமல்காந்
தருவம் அருத்தநூல்
பாய பலவும்
விதிமுறையாற் பயின்று
நந்திப் பிரானருள்சேர்
தூய முனிவன்
பின்னரும்ஒன் றிரந்தது
வேண்டித்
தொழுதுரைப்பான் 41

399 சனற்குமார முனிவர்
வேண்டுகோள்
வேறு
உண்புடைக் கல்வி

யெல்லாம் உணர்ந்தனன்
அவைகள் எங்கும்
இன்புடைச் சிவப்பே
றொன்றே முத்தியென்
றியம்பும் எந்தாய்
புன்புலை உடம்பு
நீங்கிப் பரவெளிப்
பொருளைக் கூடும்
அன்புடைப் பசுவே
அன்றோ சிவனியல்
பதனைச்சேரும் 42
மானிடன் விசும்பத்
தோல்போற் சுருட்டுதல்
வல்லோனாயின்
ஈனமில் சிவனைக்
காணா திடும்பைதீர்
வீடும் எய்தும்

மானமார் சுருதி கூறும்
வழக்கிவை யாதலாலே
யானமர் இறையைக்
காணும் உபாயமே 43
அறிதல் வேண்டும்
401 அங்கது பலவாற்
றானும் அருளினை
அவற்றி னுள்ளும்
தீங்கற எளிதிற் கூடும்
உபாயமுஞ் செப்பு
கென்னா
ஓங்குசீர்ச் சனற்கு மாரன்
உரைதலுஞ் செவிம
டுத்து
வீங்குபே ருவகை பூப்ப
விளம்புவான் நந்தி
எங்கோன் 44

402 நந்தி தேவர்
அனுக்கிரகம்

அருள்பெறு சனற்கு
மாரன் அறுமுகன்
கூறென் றுன்னைச்
சுருதியிற் கிளந்த
வாற்றால் அறிவினில்
தூயை முற்றும்
இருளற உணர்ந்தாய்
இருந்தவத் தலைவன்
கேட்டி
மருள்தீர்ந் துலக முய்ய
வினாயது வகுத்துச்
சொல்வாம்
403 அந்தணர் அரசர் நாயகர்
இருபிறப் பாளர் வேத

மந்திரக் குரியோர்
நான்கு வகைநிலை
இவர்கட்கென்ப
நிந்தையில் பிரம சாரி
நிலைஉயர் மனையின்
வாழ்க்கை
சுந்தர வனத்தின்
வாழ்க்கை துறவறம் 46
அந்நான் காமால்
404 கருநிலைக் கெட்டா
மாயுள் பதினொன்று
கருதீ ராறாம்
வருடத்தின் மறையோ
ராதி மூவர்க்கும் மறையி
னாசான்
தெருளுப நயனஞ்
செய்வன் முனிவர்தங்

கடந்தீர்த் தற்குப்
பொருவிலா மறைகள்
அங்கம் ஓதுதற்
பொருட்டு மன்னோ 47
அங்கதன் பின்னர்க்
காமம் அறம்பொருட்
பேற்றி னோடும்
ஓங்சீர்ப் பிதிரர்
வானோர் கடன்களின்
ஒழிவும் வேண்டி
மாங்குயிற் கிளவி
மென்றோள்
மனைவியை மணப்பர்
பின்னர்த்
தாங்கரும் வனத்துச்
செல்வர் தவமிகக்
கிடைத்தல் வேண்டி 48

406 கடனெலாம் விண்ட
பின்பு கருதருந் துறவிற்
செல்வர்
நடலைகூர் உலக
வாழ்வை வெறுத்துநல்
லறிவு தூய்தாய்
இடனுடைத் துறவிற்
சென்றே இருவகை
நியாயத் தோடு
மடனற நன்னூல் பற்றி
மறைமுடி வுணர்தல்
வேண்டும்



407 இருவகை நியாயம்
பூர்வம் உத்தரம்
எனப்பே ரெய்தும்
ஒருவகை சிவபூ
சைக்காம் ஒருவகை

சிவப்பேற் றிற்காம்
சுருதியே இலிங்கஞ்
சொற்சேர்
வெடுத்துக்கோள்
இடமே சொல்லின்
வருபெயர் இவற்றான்
மென்மை வன்மையென்
றிவற்றை யாய்தல்
408 கடப்படு பூசை பூர்வ
கருமநூல் நியாயத்
தாகும்
தொடக்கமீ றப்பி யாசம்
அபூர்வதை பலமே
சொல்லின்
எடுத்துரை அருத்த
வாதம் இவைசிவ பேறு
கூறற்

கடுத்தெளத் தரநூல்
உண்மை துணிவதற் 51
கிலிங்க மாமால்
409 இரவெரி யாடுந் தேவை
இம்முறை துணிந்த
ஞானி
பிரனவ மனுவாற்
போற்றிப் பேதுறா
துட்ல்சாங் காறும்
பரவிடின் அவற்கு
முக்கட் பரன்வெளிப்
படுவன் பட்டால்
மருவுபே ரின்பந்
துய்த்து விமலனின்
வாழ் லாமே 52
410 பின்னவன் மாய
வாழ்விற் பிறந்திறான்

சிவமே சேர்வன்
முன்னருஞ் சிவப்பேற்
றிற்கு முரைவரும்
உபாயம் ஈதாம்
இந்நெறி சிறியோர்
யார்க்கும் எளியதன்
றெளிதாய் நேராம்
அந்நெறி முக்கண்
எம்மான் பதிகளின் 53
அமர்தலாகும்.
411 அயிடைச் சாக்க
டெய்தின் விலங்குநாய்
அடுவான் புள்ளு
மேயபுன் மரங்க
ளேனும் வீடுபே றடைவ
துண்மை
நீயிதற் கையங்

கொள்ளேல் என்றலும்
நெடிது வாழ்ந்து
தூயசீர் நந்தி பாதம்
தொழுதெதிர் குமாரன் 54
கூறும்

412 சீர்த்தல வாழ்க்கை
ஒன்றே செவ்வழி
என்றாய் ஐய
பார்த்தலத் திறைவன்
மேவும் பதிகளெண்
ணிலவாம் மிக்க
கீர்த்திசால் அவற்றுள்
மேலாய்க் கிளர்சிவப்
பேற்றான் முத்தி
யார்த்தியி றுதவுந்
தானம் யாதுநீ யருளு
கென்றான் 55

413 என்றலும் நந்திப்
புத்தேள் கனப்பொழு
தெண்ணி முன்னாள்
வன்றிறல் விடையோன்
தேவிக் குரைத்தது
மனத்துட் கொண்டான்
அன்றவர்ப் பணிந்து
மைந்தா அரனுமைக்
கியம்பு மாற்றம்
நன்றுநீ கேட்டி யென்ன
வரன்முறை நவில
லுற்றான். 56

ஆகத் திருவிருத்தம் 413

--------------

## 6. தலவிசேடப்படலம் (414-

# 444)

சிவபெருமான் திருவோலக்கச் சிறப்பு

414 எழுசீராசிரிய விருத்தம்

இழைத்தபன் மணிகள் காந்திவிட் டெறிக்கும்
    எரிசுடர்ப்
பேரொளிப் பரப்பு
மழைக்களத் திறையைத்
தொழப்புகுந் திறல்சால்
    வானவர்
நோக்கலாற் றாது
விழித்துணை இமைப்பச்
செய்தொறும் அவரவ்
    விளைவறி யாதெமக்
கென்னே

பழுத்ததோ முடிவு
காலமென் றழுங்கும்
படியதோர் 1
கனகமண் டபத்தில்.
415 எறுழ்வலித் திரள்தோள்
இரணியன்
மருமத்தி ரத்தநீர்
வாய்மடுத் தெழுந்த
வெறிமயக் கறுத்த
பெருவலி நோக்கி
விலக்குறா மும்மல
மயக்குந்
தெறுகென நரமா
மடங்கல்தான் முழுதும்
அடங்கலாய்த்
திருவடி தாங்கி
யுறுவதுகடுக்கும்

மடங்கலேற் றெருத்தத்
தொளியெறி 2
மணிப்பொலந் தவிசின்
416 எரியவிர்ந் தனைய
துவர்மணிச் சடிலத்
தெறிதிரைக்
கங்கையூ டலைந்து
மருவருங் கேண்மைச்
சிறுபிறைக் கிரங்கிப்
பற்றித்தன்
இருக்கையிற்
கொடுபோய்த்
தெருமரா தளிப்பான்
முழுமதி யணுகிச்
செவ்விபாத்
துறைவது மானும்
விரிகதிர்த் தரளத்

தொங்கல் சூழ்வட்ட
வெண்குடை மீமிசை 3
நிழற்ற

417 தொல்லை நாட்புகழ்க
ளெங்கணும் நெருங்கத்
துன்றி வெற்றிடங்க
ளின்மையினால்
அல்லுறழ் மிடற்றுப்
பிரானிடத் துயிர்த்த
வற்றைநாட் கீர்த்திக
ளிருபாற்
செல்லிடந் துருவிக்
கொட்பபோ லரிமான்
செழுந்தவி
சொடுமணிக் குடைக்கீழ்
எல்லையும் மேலும்
வெள்ளொளிப்

பரப்பும்
இடையினிற் சாமரை
இரட்ட 4
418 வேட்ட வேட்டாங்கு
வரங்கள் பெற்றேகும்
விண்ணவ ரதுகொடு
செருக்கிக்
கோட்டமுற் றழியா
தறிவுறுப் பவர்போற்
கோட்டமுற் றழிகய
முகத்தன்
வால்திறற் சூரன்
முதலியோர்ச் செகுத்த
மருப்பொடு
சுடர்வடி நெடுவேல்
காட்டிய கரத்தி னறுமுகத்
தேவுங்

கணேசனு மிருபுடை
வயங்க

419 உருவினிற் பெருமை
பெருமை யன்றுருவிற்
சிறுமை யெய்தினும்
உமைபாகன்
அருளினிற் பெருமை
பெருமை யென்றுலக
வகிலமுந் தெளிதரக்
காட்டி
மருமலர்க் கிழவன்
முதலியோர் புறத்து
மன்னிட நகுநடைக்
குறுத்தாட்
பெருவயிற் றழல்கால்
குழிவிழிப்
பூதப் பெருங்கண

மருகுநின் றேத்த. 6
கண்ணிணைக் கடங்காத்
திருவுருவழகைக்
காண்டொறும்
பண்டுதான் கொண்ட
பெண்ணுரு எடுப்பக்
கருதிநீண் முகுந்தன்
பிரிவிலா
தொருபுடை யமர்ந்து
பண்ணிசை மொழியாள்
வனப்புமெம் பெருமான்
பார்வையும்
நோக்கிமற் றெமக்கிங்
கெண்ணிய எண்ணமுற்
றுறாதினி
யென்றெழுந்
தவக்கருத்தினை மீட்ப

421 அடலைத் தொடங்குந்
தொறுந்திரு மேனி
யழகினைக்
கண்களான் மடுத்து
வாடரு மயல்பூண்
டவசராய்ச் சதியின்
வழிப்பதம்
பெயர்தரா நிலையை
நாடகத் தலைவர்க்
கெதிரடியேங்
கள்நடிப்பதற்
கஞ்சுதும் என்னாச்
சேடமை வனப்பின்
உருப்பசி முதலோர்
ஐநயச் செய்கையான்
மறைப்ப

422 மல்லலங் கமலத்
திருவடிநோவ
மறுவலும் மறுவலும்
ஓடிக்
கல்லொளி பரப்பும்
மணிமுடி யழுத்துங்
கடவுளர்
தொகையினை விலக்கு
நல்லமெய்ப்
பணியைநான் பெறநல்கி
யவரவர்க்
கருள்செய்து போக்கி
எல்லைதீர் கருணை
மலையி னோலக்கத்
திருந்தனன்
என்னையா ளுடையான்

9

423 அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

இருந்தருள் காலை
வெண்கேழ் இமம்பொதி
யடுக்க லீன்ற
முருந்திள முறுவற்
செவ்வாய் முகிழ்முலைக்
கடவுட் கற்பிற்
திருந்திழை யுலகம் ஈன்ற
செல்விமுத் தேவுங்
காணாப்
பெருந்தகை யடிகள்
போற்றி யிதுவொன்று
பேச லுற்றான் 10

424 உமா தேவியார் வினா

கடப்படும் வீடு பேறுன்
திருவடிக் காட்சி
தன்னால்
கிடைப்பதாம் மறையீ
றாய்ந்து கிளர்தவம்
தியானம் நிட்டை
நடைப்படி முதிர்ந்து
வாய்ந்த நல்லவர்க் கன்றி
உன்றன்
அடித்துணை காண்டல்
ஏனோர்க் கரிதரி தாகும்
அம்மா 11

ஏனையோர் விலங்கு
புட்கள் இங்குனைக்
கண்டு முத்தி
மேனிலத் துறுவ
தெவ்வா றென்றனள்

வினாத லோடும்
ஊனுடை உயிர்கள்
யாவும் உய்யுமா
கருணை கூர்ந்து
மானமர் கரத்துப்
புத்தேள் வாய்மலர்ந் 12
தருளும் மன்னோ
426 சிவபெருமான் விடை
அரிபரந் அகன்ற
உண்கண் அலர்முலை
அணங்கு கேள்யாம்
பரவெளிப் பரப்பின்
வைகும் பண்பினேம்
உலகம் எங்கும்
விரவியே நிறைந்து
நிற்பேம் விளங்குமெம்
நாலாம் பாதம்

தரைமுதல் உலகாம்
மூன்று பாதம்வான் 13
தலத்து மேவும்
427 அவகை வயங்கு நம்மை
யாவரும் அறிய
மாட்டார்
ஓவரும் பெருமை சான்ற
உத்தம தலங்கள் தம்மின்
ஏவருங் காண
வாழ்வேம் என்றலும்
உவகை பொங்கி
யாவையத் தலங்கள்
என்றாட் கெம்பிரான்
அருளிச் செய்யும். 14

428 வேறு
இருச்சே தாலவாய்

சிராப்பள்ளி
திருவழுவூர் திதுவை
யாறு
தருச்சூழும் இடைமரு
தூர்யாம் என்றும்
நடம்புரியச் சலியாத்
தில்லை
கருச்சாடு முதுகுன்றம்
அருணகிரி
திருவிரிஞ்சை
கவினார் ஒத்தூர்
மருச்சுங் குழலுமையே
நின்னொடுயாம்
மகிழ்ந்துறையும்
வளஞ்சூழ் காஞ்சி
429 அலவனம் காளத்தி
திருச்சயிலம் சித்தவடம்

அடியார் சைவக்
கோலநிறை
விருப்பாக்கந் திரியம்ப
கந்திருக்கோ
கன்னம் இன்பம்
சாலஉத வுச்சயினி
மாகாளம் காசிகே
தாரமே என்றும்
காலனுறாப் பிரபாசம்
இமயமலை
மந்தரம்சீர்க் கயிலை 16
யாதி
எண்ணிலவாம்
யாம்மருவும்
இடங்களென
உரைத்தருள
இறைவி கேளா

அண்ணலே
இவற்றுள்ளும்
சிறந்ததலம்
        யாதென்ன அருளிச்
செய்வான்
புண்ணியமெய்த்
திருக்காஞ்சி எவற்றினும்
        மேம்படுபுரியாம்
அவ்வூர் தன்னை
எண்ணினுங்கேட்
பினுஞ்சொலினும்
வணங்கினும்பே
        ரின்பவீ டெவர்க்கும்
நல்கும். 17
431 அப்பதியின்
எஞ்ஞான்றும்
மகிழ்கூர்ந்து

நின்னொடுநாம்
அமர்வேம் அவ்வூர்
பற்பலர்சூழ் அவிமுத்தத்
தலத்தினும்மேம்
பட்டதுவாம்
அவிமுத் தத்தின்
இப்புவனங் காப்பயாம்
விச்சுவநா
தப்பெயரான்
இலிங்கந் தாபித்
தொப்பருஞ்சீர்
பெறவைத்தேம்
காஞ்சிநக
ரிடத்தொரு மாமூலந்
தன்னில் 18
432 தோற்றம்நிலை
இறுதிமறைப்

பருளென்னும்
ஐந்தொழிலும்
நடாத்த யாமே
ஏற்றமுடை ஏகம்ப
நாதனெனும் திருப்பெயர்
பூண்டு லிங்க
மானோம்
தேற்றுமித னாற்காஞ்சி
எவற்றினுக்கும்
அதிகமெனத்
தெளிவாய் அங்கண்
போற்றி யொரு
நாளேனும்
அமர்ந்துறையின்
முத்திநிலை புகுத
லாமால். 19
433 வழிச்செலவிற்

புகுந்தேனும்
மறந்தேனும்
பொருளாசை மருவி
யேனும்
கழிப்பருஞ்சீர்
காஞ்சியினிற்
கணப்பொழுது
வதிந்தோரும்
கலப்பர் முத்தி
பழிப்பிலாக்
காஞ்சியெனத்
தன்னியல்பான்
ஒருபொழுது பகரிற்
கண்ணில்
ஒழிப்பரும்பா
தகமனைத்தும்
ஒழிந்துபெருந்

துறக்கவீ டுறுதல்
உண்மை.
434 அக்காஞ்சி கலிநாசப்
பொருட்டுநாம்
படைத்துவைத்த
தாதலாலே
எக்காலும் அந்நகரின்
அகத்துயரும்
வினைத்துயரும்
எய்தா வாகும்
மைக்காளஞ்
சுவையமிழ்தின்
மணந்தவிழி
மணிநீவி அல்குல்
எட்டுத்
திக்காளர்
தமைப்பொதியும்

பெருங்கீர்த்தி
நகரவளஞ் சிறிது
கேட்டி 22

கலிமுதல்தீங் கணுகரிய
வேலியெனச்
சூழ்பொழிலுங்
காவல் மாறா
நிலையுடையுட்
சேனையெனக்
குவளைவி
நந்தனநீள்
வனமுந்தேவ
குலநிறைப· றீபமென
நிரைகமலக்
குளிர்தடமுங்
கயிலை தன்னில்
இலகுறுபல்

குவடென்னப்
பலதளியும்
உடைத்தாகும் 22
எறிநீர்க் காஞ்சி.

436 பம்பைகம்பை
புண்ணியநீர் மஞ்சள்நதி
வேகவதி பாலி
சேயா
றென்பனவே முலகுமிடு
மேழ்மாலை
யெனவொழுகும்
எய்து வோரைச்
செம்பதுமக் கரமெடுத்து
விரையநகர்
விளிப்பதுபோல்
தெங்கு நீளும்
வம்பவிழ்பூஞ்

சோலைகளுள்
மழைமறைந்த
கதிர்போல 23
வயங்கும் மூதூர்.
437 ஐயிருநூற்
றுயர்சாகைகளாப்
படைத்திங்கண்
அமர்ந்து வாழும்
ஐயனேயென் முதலென்
றெழுகோடி
மனுக்களுப
மனுவால் யார்க்கும்
ஐயமறத் தெரிவிக்கும்
மறைமாவின்
சாரூபம் அடைந்த
போலும்
ஐயநறு மாம்பொழில்கள்

எஞ்ஞான்றுங்
கனிகளறா தமலு 24
மாங்கண்.
438 விப்பிரர்கள்
முதல்நால்வர்
சங்கரர்நெய்
தொலர்மயிர்
வினைஞர் செக்கார்
செப்பிடையர்
தச்சர்கொல்லர்
பொன்வினைஞர்
தேவகணி கையர்கள்
கூத்தர்
விற்புருவப் பரத்தைமுத
லோர்தெருக்கள்
கலப்பின்றி
வெவ்வே றாகிப்

பொற்பநீண்
டகன்றொழுங்காய்
மதிக்கணிசெய்
கதிர்களெனப்
பொலியு மாங்கண்
439 தந்தைதாய்
இரண்டொழியப்
பிறவெலாங்
கொளத்தகுமா
வணங்கள் மல்கும்
எந்தவூர் வேதவே
தாந்தங்கள் மூவுலகும்
எடுத்துக் கூறும்
அந்தவூ ரெனக்கோடி
மடமயிலே
கவ்வென்ப தயன்பே
ரென்ன

முந்துமிருக் கோதுமஞ்
செண்பகுதி
யடைவொடு
பூசைமொழியு மாதோ
இருக்கு - இருக்கு
வேதம்- என்பது
பிர்மனின் பெயர்.
அஞ்செண்பகுதி -`அஞ்ச்`
என்னும் தாது.
க+அஞ்ச்+ காஞ்சி
என்றாவது 26
வடநூல் இலக்கணவிதி

திசைமுகனால்
அஞ்சிக்கப் படுதலினால்
காஞ்சியெனத்
திசைபோய் மல்கும்

இசையுடைய திதுபிரம
லோகமென்றும்
இதனாற்பேர்
எய்துமாற்றான்
அசைவிலா
தங்குறைவோர்
எல்லோர்க்கும்
வீடுதவும் அவ்வூர்
நாப்பண்
வசையின்றித்
திப்பியமாய்ப்
புண்டரிகம்
போலெமக்கு
வயங்கும் கோயில்
அஞ்சிக்கப் படுதலினால்
- அஞ்சப்படுதலினால். 27
441 அங்கதனிற் சோதிலிங்க

வடிவாகி
யாமென்றும்
அமர்வேம் இவ்வா
றிங்கிரண்டாம்
மறைவிளம்பும்
சந்தோகா
மறையெம்மை
ஒளிவான் என்னும்
துங்கநகர் தனைப்பிரம
புரமென்னும்
இறுதிமறை சுவர்க்க
மென்னும்
பங்கமறு தயித்திரியம்
சோதிசூழ்
சுவர்க்கமெனப்
பகரா நிற்கும் 28
442 அப்பிரம புரங்காஞ்சி

நகரல்லால்
வேறில்லை யாகும்
என்றே
செப்புமுப நிடதமெலாஞ்
சிவாகமங்க
ளொடுமுழங்கும்
செல்வீ இந்த
வைப்பினைச்சே
யிடையாயி னும்இருந்து
வணங்கிற் கண்ணில்
எப்பெரும்பா
வமும்நீங்கி வீடெய்தும்
உனக்குண்மை
இயம்பி னோமால் 29

443 என்றிறைவன் உலகுய்ய
வினாவுமலைப்

பெருமாட்டிக்கியம்பும்
வாய்மை
அன்றுவினா வியசனற்கு
மாரனுக்குத்
திருநந்தி உரைத்தான்
அன்னோன்
வென்றபொறி வாதரா
யணர்க்குரைப்ப
அவனெனக்கு
விளம்பல் செய்தான்
குன்றனைய
பெருந்தவத்தீர்
சிவனைக்காண்
பதற்கேது இதுவே
கொண்மின் 30

444 நூற்பயன்
பரவரும்மந் தணமாகும்

இக்காதை
　　மெய்யன்பிற்
படிப்போர் கேட்போர்
கரிசுறுநோய் நீங்கிநெடு
நாட்புவியின்
　　மக்களொடுங்
களித்து வாழ்ந்து
வரகுணராய்
மறுமையினும்
பெரும்போகம்
　　இனிதுண்டு மாறா
முத்தி
விரவுவரென்
றுளங்கொள்ளச் சூதமுனி
　　முனிவரர்க்கு
விளம்பி னானால் 31

# ஆகத் திருவிருத்தம் 444

---

This file was last updated on Sept 22, 2007.